பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 32 வியாழக்கிழமை 15.06.2023 கதிர் 216

# காங்கேசன்துறையில் ஜூன் 17 பயணிகள் 'டெர்மினல்' திறப்பு

## முதல் தடவையாக இந்திய சொகுசு கப்பலும் வருகை

ந.லோகதயாளன்.

காங்கேசன்துறையில் அமைக்கப்பட்டுள்ள பயணிகள் 'டெர்மினல்' ஜூன் 17 அன்று காலை துறைமுகங்கள் கப்பல்த்துறை அமைச்சர் நிமால் சிறிபால டீ சில்வாவினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

துறைமுகப் பகுதியில் அமைக்கப்பட்ட மக்கள் தங்ககம், குடிவரவு குடியகல்வு கட்டிப்பாட்டுப் பிரிவு உள்ளிட்டவற்றின் கட்டுமானப் பணிகள் முடிவடைந்துள்ளன. இவற்றை உள்ளடக்கிய பயணிகள் டெர்மினலையே அமைச்சர் திறந்து வைக்கவுள்ளார்.

துறைமுகங்கள் கப்பல் போக்குவரத்துத் திணைக்களப்பணிப்பாளருடன் சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி ஆகியோரும் இந்த நிகழ்வுக்காக அமைச்சருடன் நாளை காங்கேசன்துறைக்கு வருகின்றனர். அன்றைய தினம் முதல் தடவையாக சென்னையில் இருந்து சுற்றுலாப் பயணிகளை ஏற்றிய சொகுசுக் கப்பலும் காங்கேசன்துறையை வந்தடையவுள்ளது. அமைச்சர் குழுவினர் அந்தக் கப்பலை ☞2

## இது ரகசியம் அல்ல!

நீண்ட நாள்களின் பின்னர் கொழும்பில் இருந்த பத்திரிகையாளரான நண்பர் நேற்று அழைப்பெடுத்தார் முன்னரெல்லாம் அடிக்கடி அழைப்பார். வடக்கில் என்ன அரசியல் நடக்கிறது என்று அறிவதற்காக அழைப்பெடுப்பது அவர் வழக்கம். இப்போதுதான் வடக்கில் அரசியல் செத்துப்போய்க் கிடக்கிறதே. அதனால் அவருக்கு அடிக்கடி எடுக்கவேண்டிய தேவை வரவில்லைப் போலும், அதனால் நீண்ட நாள்களாகப் பேசவில்லை.

நேற்று அழைப்பெடுத்தவர் எடுத்த எடுப்பிலேயே தமிழ்ப் பத்திரிகைகளிலேயே நீங்கள் மட்டும்தான் ரணிலுக்கும் பெரமுனவுக்கும் முட்டுப்பட்டுக்கொண்டு இருக்கின்றது, தேனிலவு கசந்து விட்டது என்றெல்லாம் எழுதுகிறீர்கள். இங்கே சிங்களப் பத்திரிகைகள் அது பற்றி எழுதித் தள்ளுகின்றன. அதுவும் ரணிலுக்கு எதிரான பத்திரிகைகள் வலு குசியோடு எழுதுகின்றன. தமிழ்ப் பத்திரிகைகள் அதைக் கண்டுகொண்டதாக இல்லை. நீங்கள் மட்டும்தான் அது பற்றித் ☞2

## இன்று முதல் தொடக்கம்

இணைய வழி ஊடாக கடவுச்சீட்டுகளைப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பிக்கும் செயற்றிட்டம் இன்று முதல் ஆரம்பிக்கப் படவுள்ளதாக குடிவரவு குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய இது தொடர்பில் தெரிவித்துள்ளதாவது,

நாடளாவிய ரீதியில் 52 பிரதேச செயலகங்களில் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.immigration.gov.lk எனும் இணையத்தளத்திற்குள் பிரவேசித்து, தேவையான தகவல்களை வழங்கி கடவுச்சீட்டுக்காக விண்ணப்பிக்க முடியும். ☞2

## சுமந்திரனும் சாணக்கியனும் இலங்கையில் புலிகளுக்கு ஆதரவாகச் சதி செய்கின்றனர்

### டான் பிரசாத் நேற்றுக் குற்றச்சாட்டு

'சுமந்திரனும், சாணக்கியனும் விடுதலைப் புலிகளுக்கு தேவையான சதி வேலைகளையே இலங்கையில் செய்கிறார்கள் என்று டான்பிரசாத் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்றையதினம் செய்தியாளரர்களைச் சந்தித்து இதனைத் தெரிவித்தார். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக் ஷவின் விசுவாசியான டான் பிரசாத், மே 19 வனமுறைகளின் தொடக்கமான காலி முகத் திடலில் போராட்டம் நடத்திய அரகலயவினர் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டவர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுக் கைது செய்யப்பட்டவர். 2016ஆம் ஆண்டு முஸ்லிம்களின் ஆர்ப்பாட்டம் மீது தற்கொலைத் தாக்குதல் நடத்துவேன் என்றும் தீ வைத்துக் கொளுத்துவேன் என்றும் மிரட்டியதற்காகவும் கைது செய்யப்பட்டவர்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுமந்திரனும், சாணக்கியனும் நாட்டில் இன, ☞2

## பெரமுனவுடனான ரணிலின் பயணம் அரசியல் தற்கொலைக்கு ஒப்பானது

### ஐக்கிய மக்கள் சக்தி விமர்சனம்

பொது ஜன பெரமுனவுடன் இணைந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பயணமானது அரசியல் தற்கொலையாகும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர்ஹஷீம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள எதிர்க்கட்சி அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுனவுடன் ஆட்சியை முன்னெடுத்துச் செல்வதும் கூட்டுவைத்துக் கொள்வதும் நிச்சயமாக அரசியல் தற்கொலையாகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியலில் நிலைத்திருக்க வேண்டுமாக இருந்தால் முதலில் இந்த அரசாங்கத்தினைக் ☞2

தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் விவகாரம்

## குருந்தூர்மலை விகாராதிபதி ஜனாதிபதி மீது கடும் விமர்சனம்

தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் குருந்து விகாரை தொடர்பாக எந்த அறிவும் இல்லாமலேயே ஜனாதிபதியுடன் கலந்துரையாடலுக்கு சென்றிருக்கிறார் என குருந்து விகாராதிபதி கலிகமுவே சந்தபோதி தேரர் தெரிவித்தார். ஜனாதிபதியின் கருத்துக்கள் தொடர்பாகவும் அவர் கடுமையாக விமர்சித்தார்.

குருந்து விகாரை காணி தொடர்பாகவும் அங்கு தொல்பொருள் திணைக்களம் கைப்பற்றிஇருக்கும் இடங்கள் தொடர்பாகவும் ஜனாதிபதி மற்றும் தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் உறுப்பினர்களுடன் முன்னெடுத் ☞2

## ஏற்கனவே தேசிய வளத்தை விற்றோரே ரெலிகொம்மையும் விற்கநிற்கிறார்கள்

### பெரமுனவின் தொழிற்சங்கம் கோபாவேசம்

நாட்டின் தேசிய வளங்களை ஏற்கனவே விற்பனை செய்தவர்களே தற்போது நாட்டில் இலாபத்தில் இயங்கும் ரெலிக்கொம் போன்ற நிறுவனங்களையும் விற்க நிற்கிறார்கள் என்று, ஸ்ரீலங்கா பொதுஜன முற்போக்கு ஊழியர் சங்கத்தின் தலைவர் அணில் ஹேமந்த நெத்திகுமார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வங்கிக் கட்டமைப்பு, நாட்டின் தகவல் தொழில்நுட்பம், நாட்டின் தொலைத்தொடர்பு, சர்வ தேச பரிமாற்றம் ☞2

## உலக நிதி உடன்படிக்கை மாநாட்டில் பங்கேற்க தலைவர்களுக்கு அழைப்பு

### விடுத்தார் பிரான்ஸ் ஜனாதிபதி

புதிய உலகளாவிய நிதி உடன்படிக்கைக்கான மாநாட்டில் பங்கேற்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட உலகத் தலைவர்களுக்கு பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் அழைப்பு விடுத்துள்ளார்.

புதிய உலகளாவிய நிதி உடன்படிக்கைக்கான மாநாடு பிரான்ஸின் பெரிஸ் நகரில் இம்மாதம் 22 மற்றும் 23 ஆகிய திகதிகளில் 'தற்போதைய உலகம் எதிர்கொள்ளும் சவால்களுக்கு தீர்வு காணல்' என்ற தொனிப்பொருளில் நடைபெறவுள்ளது.

உலக சமூகத்தை பாதித்துள்ள பல்வேறுபட்ட நெருக்கடிகளுக்கு உடனடி தீர்வு காண வேண்டியதன் அவசியம் குறித்து இந்த மாநாட்டின் ஊடாக ஆராயப்பட உள்ளது.

காலநிலை மாற்றம் மற்றும் பல்லுயிர் இழப்பு முதல் கொரோனா தொற்றுநோயின் தாக்கம் வரை, உலகளாவிய சமூகம் யுத்தங்கள் உட்பட பல சிக்கல்களை எதிர்கொண்டுள்ளது.

இந்த சவால்களை எதிர்கொள்ள புதிய நிதி ஒப்பந்தத்தின் அவசியத்தை உணர்ந்த பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன், கூட்டு நடவடிக்கையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி மாநாட்டில் பங்கேற்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உத்தியோகபூர்வ அழைப்பை விடுத்துள்ளார்.

உச்சிமாநாட்டின் மற்றொரு நோக்கம், பலதரப்பு நிதித் துறையை ☞2

## நாட்டின் தொல்பொருள் திணைக்களம் பௌத்தத்துக்கு மட்டுமே சொந்தமல்ல

### அகிலவிராஜ் கூறுகிறார்

தொல்பொருள் திணைக்களம் பௌத்தத்துக்கு மட்டும் சொந்தமானதல்ல என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தாவது: தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளுடன் ஜனாதிபதி நடத்திய பேச்சை இன்று சில அரசியல்வாதிகள் விமர்சித்து வருகிறார்கள்.

2,500 வருட வரலாறு கொண்ட எமது நாட்டில், எங்கு தோண்டினாலும் புராதனச் சின்னங்கள் கிடைத்துக்கொண்டுதான் இருக்கும். மலசலகூடத்துக்காக குழியொன்றை தோண்டினால்கூட, ☞2

## பெரமுனவுக்கும் ஜனாதிபதிக்கும் எந்தவிதப் பிரச்சினையும் இல்லை

### இப்படி அறிவித்துள்ளது ஐக்கிய தேசியக் கட்சி

பொதுஜன பெரமுனவுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எவ்விதமான பிரச்சினைகளும் இல்லை என்று ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

அக்கட்சியின் தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்த கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவுக்கும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் பிரச்சினைகள் இருப்பதாக கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனென்றால் கடந்த கூட்டத்தொடரில் ஜனாதிபதியுடன், ☞2

## தேர்தல்களுக்கு நிதி இன்மை சந்தேகத்துக்குரியதொன்று

### இராஜாங்க அமைச்சரே கருத்து

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான திகதி இதுவரை அறிவிக்கப்படாதுள்ளமை சந்தேகத்திற்குரியதென நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார், அவர் மேலும் தெரிவித்ததாவது:

எந்தநேரத்திலும் ஆளும் கட்சியை விட்டு விலகி எதிர்க்கட்சியில் அமர தாம் அஞ்சப்போவதில்லை. நாம் எவ்வளவு காலம் இந்த அரசாங்கத்தில் இருப்போம் என்பது நமது தலைவர்கள் நடத்தப்படும் விதத்தை வைத்தே தீர்மானிக்கப்படும். எங்களை மோசமாக நடத்தினால், அப்படிப்பட்ட அரசாங்கத்தில் நாங்கள் இருக்க விரும்பவில்லை என்பது தெளிவாகிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை விட்டுச் செல்லும் எண்ணம் எமக்கு இல்லை. அவர் நம்மைத் தனியாக விட்டுவிட்டு வேறு வழியில் சென்றால், அவரை பின்தொடர நாம் தயாரில்லை.

மேலும், எந்த ஒரு சட்டமூலத்தையும் நிறைவேற்ற, பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இருக்க வேண்டும். எங்களுடன் இருக்கும் வரை அரசுடன் இருப்போம். எங்களை வேண்டாம் என்று நினைக்கும்போதெல்லாம் எதிர்க்கட்சியிலும் கதிரைகள் உள்ளன.

நாடாளுமன்றத்தின் தரையில் அமர ☞2

## நுழைவாயில் இரும்புக் கதவு வீழ்ந்து சிறுவன் பரிதாபச் சாவு

### கோப்பாபுலவில் நேற்றுச் சோகம்

(ந.லோகதயாளன்).

முல்லைத்தீவு கேப்பாபுலவில் வளவின் நுழைவாயிலில் தற்காலிகமாகப் பொருத்தப்பட்டிருந்த இரும்புக் கதவு விழுந்ததில் மூன்று வயதுச் சிறுவன் பரிதாபகரமாக உயிரிழந்தான்.

அதே இடத்தில் வசிக்கும் ஆதவன் லிதுர்சிகன் என்னும் சிறுவனே உயிரிழந்துள்ளான்.

வற்றாப்பளை கேப்பாபிலவு மாதிரிக் ☞2

## மின்சார சபையை 15 கட்டங்களாக தனியாருக்கு விற்க நடவடிக்கை

### குற்றஞ்சாட்டுகின்றது அதன் ஊழியர் சங்கம்

இலங்கை மின்சார சபையை 15 கட்டங்களாகப் பிரித்து விற்பனை செய்வதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக இலங்கை மின்சார சபையின் ஊழியர்கள் சங்கத்தின் பிரதம செயலாளர் ரஞ்சன் ஜயலால் குற்றம் சாட்டியுள்ளார்.

அநுராதபுரத்தில் ☞2

## கடவுச் சீட்டு அலுவலகம் முன் 5 பேர் நேற்றுத் திடீர்க் கைது

### முறைகேடாக பணம் சம்பாதித்த குற்றச்சாட்டில்

வவுனியாவில் அமைந்துள்ள குடிவரவு - குடியகல்வு பிராந்தியக் காரியாலயம்

முன்பாக நேற்று 5 பேர் வவுனியாப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

குடிவரவு மற்றும் குடியகல்வுஅலுவலகத்ததின் வடக்கு பிராந்திய காரியாலயம்

வவுனியாவில் அமைந்துள்ளது. அங்கு கடவுச் சீட்டு உள்ளிட்ட சேவைகளைப்

பெறுவதற்காக வருபவர்களிடம் அனுமதியற்ற முறையில் பணம் பெற்று வந்தார்கள் ☞2

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

தொடர்ந்து குறிப்பிட்டு வருகின்றீர்கள் என்றார்.

உள்ளங்கைப் புண்ணுக்குக் கண்ணாடி எதற்கு என்று பூடகமாகப் பதிலளித்த நான், அவரிடம் அது சரி இன்று (நேற்று) பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட எல்லாக் கட்சிக்காரர்களையும் ரணில் பேச்சுக்கு அழைத்திருந்தரே மகிந்த, பஸில் உள்ளிட்டோருக்கும் அழைப்பு அனுப்பப்பட்டதே என்னவாயிற்று என்று கேட்டேன். அவர் ஆளும் தரப்பினரோடும் நல்ல தொடர்புள்ளவர். நாளாந்தம் பேசக்கூடியவர். அமைச்சர்கள், முன்னாள் அமைச்சர்கள் என்று நெருக்கமாகப் பழகக்கூடியவர். அதனால் விவரம் அறிய அவரிடம் கேட்டேன்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தினை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கு பொதுஜனபெரமுன ஒத்துழைப்புக்களை வழங்கும் என்று அறிவித்துள்ளது என்றார். இருந்தாலும் பொதுஜனபெரமுனவின் கட்சி அடையாளம் மற்றும் சுதந்திரம் உள்ளிட்ட விடயங்களில் ஜனாதிபதி தலையீடுகளைச் செய்ய வேண்டாமெனவும் கட்சி நேரடியாகவே நேற்று ரணிலிடம் தெரிவித்துவிட்டது என்றார்.

இரண்டு நாட்களுக்கு முன்னர் பொதுஜனபெரமுனவின் மாவட்ட அமைப்பாளர்களையும் கூட்டத்திற்கு அழைத்திருந்தார் ரணில். ஆனால் கட்சித் தலைமை தலையிட்டு அவர்களைத் தடுத்துவிட்டதால் அவர்களில் பொரும்பாலானவர்கள் அந்தக் கூட்டத்திற்கு வருகை தரந்திருக்கவில்லை. பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கட்சி அமைப்பாளர்களையும் ரணில் தன் விருப்பப்படி இப்படி கட்சிக்கூடாக அன்றி நேரடியாக அழைப்பதற்கு ஏற்கனவே கட்சியின் செயலாளர் சாகர காரியவாசம் எதிர்ப்புத் தெரிவித்திருந்தார்.

அது தொடர்பில்தான் நேற்றும் பெரமுனத் தலைவர்கள் ரணிலை ஒரு பிடிபிடித்தார்கள் என்று அவர் தெரிவித்தார். அவர்களின் கருத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் இணக்கம் தெரிவித்துள்ளார் என்று அறிய முடிந்ததாக எனது நண்பர் தெரிவித்தார்.

நேற்றைய சந்திப்பில் கடந்த சந்திப்பில் பங்கேற்காதிருந்த பொதுஜனபெரமுன, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சி, காங்கிரஸ் உள்ளிட்ட தரப்பினர் பங்கேற்றிருந்தனர்.

பொதுஜன பெருமுனவின் சார்பில் அதன் ஸ்தாபகத் தலைவர் பஷில் ராஜபக்ஷ, செயலாளர் சாகரகாரய வசம் உள்ளிட்டவர்கள் பற்கேற்றிருந்தனர். மகிந்த வரவில்லை. அத்துடன் ஜீவன் தொண்டமான், அதாவுல்லா, வஜிரஅபேகுணவர்த்தன உள்ளிட்டவர்களும் பங்கேற்றிருந்தனர்.

வாராந்தம் இவ்வாறான சந்திப்பைத் தொடர்ந்து முன்னெடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

**இடிமின்னல்**

## குருந்தூர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருந்த கலந்துரையாடல் தொடர்பாகவும் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: ,

மகாவிகாரையை விட குருந்து விகாரை விசாலமானதா என்று ஜனாதிபதியின் கேள்விக்கு பணிப்பாளருக்குபதில்சொல்ல தெரியாமல் இருந்திருக்கிறது. அவர் குருந்து விகாரைப் பிரச்சினை ஏற்பட்ட காலத்தில் இருந்து இந்த விகாரையின் பரப்பளவு தொடர்பாகவோ இங்குள்ள பிரச்சினை தொடர்பாகவோ சரியாக ஆராய்ந்து பார்க்கவில்லை.

குருந்துவிகாரைக்கு அவர் வரும்போது தமிழ் மக்கள் பிரச்சினைப்படுத்துவார்களோ என்ற அச்சத்துடனே இங்கு வந்து அவசரமாகச் சென்று விடுவார். அதனால் இந்த விகாரையின் காணி தொடர்பில் அவர் எந்த தயார் நிலையும் இன்றித் ஜனாதிபதியுடனான கலந்துரையாடலுக்கு சென்றிருக்கிறார்.

குருந்து விகாரையின் காணி தொடர்பில் தெரிவிப்பதாக இருந்தால், 1933 இல் வெள்ளையர் காலத்தில் குருந்து விகாரை தொல்பொருள் பாதுகாப்பு பிரதேசமாக 78 ஏக்கர் நிலப்பரப்பாக அளவிட்டிருந்தது.

அதன்பின்னர் மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வுகளின் பின்னர் இன்னும் பல தொல்பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து வவுனியா தொல்பொருள் காரியாலயத்தினால் தொடர்ந்து பலவருடங்களாக மேற்கொண்ட ஆய்வின் பின்னரே புதிய தொல்பொருள் இருக்கும் பிரதேசங்களை கண்டுபிடிக்கப்பட்டு எல்லை தூண்கள் நாட்டப்பட்டதால் அந்தபிரதேசத்தில் 229 ஏக்கர் இருப்பதாக அறிந்துகொள்ள முடிந்தது.

அதன் பிரகாரம் மொத்தமாக தற்போது சுமார் 310 ஏக்கர் காணிப்பரப்பு குருந்து விகாரைக்கு இருக்கிறது. அப்படியானால் ஜனாதிபதி தெரிவிப்பதுபோல் மஹா விகாரை 100 ஏக்கரும் இல்லையே? ருவன் வெலிசாய, தூபாராமய, தேத்தவனாராமய, ஸ்ரீமாபோதி இந்த பகுதிகளை எடுத்துக்கொண்டாலும் 500 ஏக்கருக்கும் அதிகமாகும்.

அபயகிரி மற்றும் மற்ற இடங்களை எடுத்துக் கொண்டால் மஹா விகாரைக்கு ஆயிரக்கணக்கான ஏக்கர் காணி இருக்கிறது. அதனால் ஜனாதிபதிக்கு இது தொடர்பாக வாசிக்கவும் தெரியாது. அதனை ஜனாதிபதிக்கு தெரிவிப்பதற்கு தொல்பொருள் பணிப்பாளர் நாயகத்துக்கும் தெரியாது.

அந்த பிரதேசத்தில் 100 வருடங்களுக்கும் அதிக காலம் வயல் வேலை செய்ததாக சுமதந்திரன் எம்,பி தெரிவித்திருந்தார். அது அப்பட்டமான பொய் யுத்தத்துக்கு பின்னர் குருந்து விகாரையை சுற்றியுள்ள 50 ஏக்கருக்கும் அதிக காணியில் காடு அழிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று அண்மை காலத்தில் அந்த பிரதேசத்தில் காடு அழிக்கப்பட்டு வயல் வேலைசெய்யப்பட்டுவந்தது. அந்த பிரதேசத்தை வனப் பாதுகாப்பு திணைக்களத்தினால் தடை செய்திருந்தது. தடையை மீறி செயற்பட்டவர்களுக்கு எதிராக வழக்குதொடுக்கப்பட்டிருக்கிறது.

அத்துடன் தமிழ் மக்களுக்கு விவசாயம் செய்ய அந்த பிரதேசத்தில் காணி வழங்கவேண்டும் என்றிருந்தால், தொல்பொருள் இல்லாத இன்னும் 6 ஆயிரம் ஏக்கர் காணி அந்த இடத்தில் இருக்கிறது. அதில் இருந்து வழங்க முடியும். அதற்கு நாங்கள் எதிர்ப்பு இல்லை. ஆனால் தொல்பொருள் இருக்கும் இடங்களை வழங்க அனுமதிக்க முடியாது என்றார்.

## இன்று .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று நாள் சேவை மற்றும் சாதாரண சேவைக்கமைய, கடவுச்சீட்டுகளை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் சாதாரண சேவைக்கு 5000 ரூபாவும், மூன்றுநாள் சேவைக்கு 15,000 ரூபாவும் அறவிடப் படவுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

## நுழைவாயில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிராமத்தில் நேற்றுப் பகல் 10 மணியளவில் இந்தச் சோகச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சிறுவன் மீது எப்படி இரும்புக் கதவு வீழ்ந்தது என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். வீட்டுச் சுற்று மதிலில் தற்காலிகமாகப் பொருத்தப்பட்டிருந்த கதவு அந்தஇடத்தைக்கடந்துசென்ற சிறுவன் மீது வீழ்ந்துள்ளது என்று ஒரு தரப்பினரும் கதவில் ஏறிச் சிறுவன் விளையாடியதனாலேயே அது அவன் மீது விழுந்தது என்று ஒரு தரப்பினரும் தெரிவித்து வரும் நிலையில் பொலிஸார் அது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதன்போது உயிரிழந்த சிறுவனின் உடலம் பிரேத பரிசோதனைக்காக மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதோடு இது தொடர்பில் பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பெரமுனவுக்கும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுஜனபெர முனவின் அங்கத்தவர்கள் பங்கேற்றுள்ளார்கள். சிலருக்கு வேலைப்பளு காரணமாக பங்கேற்காது விட்டிருக்கலாம். எனக்கு கூட சில கூட்டங்களில் பங்கேற்க முடியாத நிலைமைகள் ஏற்படுகின்றன. ஆகவே நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் பங்கேற்காமை தொடர்பில் முரண்பாடுகள் உள்ளதாக சித்தரிப்பது பொருத்தமற்றது என்றார்.

இதேவேளை, பியகமவில் நேற்றைய தினம் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மக்கள் சந்திப்பின் போது, அக்கட்சியின் பிரதி தலைவரும், காலநிலை மாற்றம் தொடர் பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான ருவான் விஜயவர்த்தன தெரிவிக்கையில்,

நூட்டில் ஸ்திரமான நிலைமையொன்றை ஏற்படுத்துவதாக இருந்தால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி ஆசனத்தில் ஐந்து, முதல் ஆறு வருடங்கள் வரையில் பதவியில் இருக்க வேண்டும்.

அவருடைய எதிர்கால இலக்குகள் நிறைந்த பொருளாதார திட்டங்களை முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும். தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப் பதற்கு பல கட்சிகள் முன்வந்துள்ளன. அந்தக் கட்சிகள் ஒன்றிணை கின்ற போது நாம் கூட்டணியாகவே தேர்தலில் போட்டியிடுவோம்.

குறித்தகூட்டணியானது, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையிலேயே முன்னெடுக்கப்படும். ஏனென்றால், ஐக்கிய தேசியக் கட்சிக்கு வழங்குவதன் ஊடாகவே நாட்டின் தலைமைத்துவத்தினை வழங்க முடியும் என்றார்.

## பெரமுனவுட.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலைத்து தேர்தலுக்குச் செல்ல வேண்டும். மக்களின் ஆணையுடன் நியமிக்கப் படுகின்ற அரசாங்கத்துடன் நாட்டை நிருவகிக்க வேண்டும்.

ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவ்வாறான தீர்மானத்தினை எடுக்காது அமைதியாக உள்ளார். அவருடைய தீர்மானம் தவறாக உள்ளதால் நாமும் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் உள்ளோம். எந்தத் தீர்மானத்தினை எடுத்தாலும் அது எமக்குச் சாதகமாகவே அமையும் ஐக்கிய மக்கள் சக்தி அதனைப் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை என்றார்.

## கடவுச் சீட்டு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்கிற குற்றச்சாட்டின் கீழேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித் னர்.

இவர்கள், அலுவலகச் சேவைகளைப்பெறுவதற்காக வரிசையில் இடம் பிடித்துக் கொடுக்க 5 ஆயிரம் ரூபாவும் வரிசை இன்றி சேவைகளை முடித்துக்கொடுக்க 25 ஆயிரம் ரூபாவும் பெற்றுவந்தார்கள் என்று பொதுமக்களிடம் இருந்து கிடைத்த முறைப் பாடுகளை அடுத்து இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

சேவைகளைப் பெறுவதற்கான இடைத் தரகர்களாக இவர்கள் அனுமதியின்றிச் செயற்பட்டு வந்தனர் என்று பொலிஸார் குற்றஞ்சாட்டினர்.

நேற்று நடத்தப்பட்ட திடீர் சோதனையின் போது அவ்வாறான 5 பேர் கைது செய்யப்பட்டர். விசாரணைகளின் பின்னர் அவர்கள் நீதிமன்றில் நிறுத்தப்படுவார்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, மே 30 இரவும் இதுபோன்று தமது தேவைக்காக அல்லாது பணத்திற்காக வரிசையில் நின்றோர், சந்தேகத்திற்கிடமான முறையில் குறித்தகாரியாலயம் முன்பாக ஒன்று கூடி நின்றோர் என 10 பேரைப் பொலிஸார் கைது செய்திருந்தனர்.

(100)

## ஏற்கனவே .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளிட்ட அனைத்தும் சைபர் வலையமைப்பின் ஊடாகவே நடைபெறுகின்றது.

ஆக்கிரமிப்பாளன், உளவாளி, வேறுவிதத்தில் பணம் சம்பாதித்த குழு இந்த நிறுவனத்தினை வாங்கினால் இந்த நிறுவத்தின் எதிர்காலம் எவ்வாறு அமையும். நிச்சயமாக அது நல்லபடியாக அமையாது.

ரெலிக்கொம்மின் சொத்துக்கள் முழுமையாக கணக்கிடப்படவில்லை. இது நாட்டின் அனைத்து மக்களுக்கும் சேவை வழங்கிய பெறுமதியான நிறுவனமாகும்.

இந்த விடயங்களை மறந்து யாருக்கு என்ன நடந்தாலும் பரவாயில்லை எனக்கு இலாபம் கிடைத்தால் சரி என்று காலிப்பக்கமிருந்து வந்த இரண்டடிகள் உயரமுள்ள யானையொன்றுக்கு உள்ளது.

ஏற்கனவே தேசிய வளங்களை விற்பனை செய்து நாட்டை நடத்தியவர்கள் தற்போது இலாபத்தில் இயங்கும் அரச நிறுவனங் களையும் விற்பனை செய்வதற்கு பார்கின்றார்கள் என்றார்.

## சுமந்திரனும்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மதவாதப் பிரச்சினையை உருவாக்கி மீண்டும் பிரிவினைவாதத்தை தோற்றுவிக்கப் பார்க்கிறார்கள். அவர்கள் விடுதலைப்புலிகளுக்குத் தேவையானதை மேற்கொள்ளவே முனைகின்றார்கள்.

தொப்பிகல காட்டில் பௌத்தசிங்கள தொல்பொருள்கள் காணப்படுகின்றன. தற்போது இக்காட்டை அழித்து மோசடிசெய்து அத்துமீறி பலர் அங்கு குடியேறியுள்ளனர்.

இந்நாட்டின் தொல்பொருளியல் இடங்களை ஆயுதங்களைப் பயன்படுத்தி பிரபாகரன் பறிக்கப் பார்த்தார். இதனை இராணுவ வீரர்கள் தடுத்தனர். பிரபாகரன் செய்ததைப் பாராளுமன்ற வரப்பிரசாதங்களைப் பயன்படுத்தி சுமந்திரனும், இராசமாணிக்கம் சாணக்கியனும் செய்யப்பார்க்கிறார்கள்.

வடக்குக், கிழக்கு மாகாணங்களுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை அவர்கள் கேட்கிறார்கள். அதனை வழங்க முடியாது. சுமந்திரன், சாணக்கியன் போல ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒன்றும் முட்டாள் அல்ல. அவருக்கு இந்நாட்டின் புராதான சின்னங்கள் தொடர்பில் நன்கு தெரியும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பதவியிலிருந்து விலக்கி, தங்களுக்கு தேவையான ஒருவரை நியமிக்கும் அளவுக்குப் புலம்பெயர் தமிழர்களிடம் பணம் இருக்கிறது.

இதனால் தான் அவர்கள் தற்போது ரணில் விக்கிரமசிங்கவையும் ஆட்டுவிக்கப்பார்கின்றார்கள் என்றார்.

## மின்சார.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது ஆட்சியாளர்கள் இலங்கை மின்சாரசபையை விற்பனை செய்வதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர. குறிப்பாக 15 கட்டங்களாகப் பிரித்து அதனை விற்பனை செய்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இலங்கைமின்சாரசபை தொடர்பில் கடந்த மாதம் சட்டமூலமொன்றைக் கொண்டு வருவதாகக் கூறியது. ஆனால் இன்று வரையில் அதனைக் கொண்டுவராதுள்ளது. அதுமட்டுமன்றி, சட்ட மூலத் தினை கைவிட்டாலும், மின்சாரத்துக்கான விலைகளைக் குறைத்து மக்களுக்கு அவற்றை வழங்குவதற்கு கூட நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படவில்லை.

அதுமட்டுமன்றி தற்போதைய சூழலில் இலங்கை மின்சார சபை ஊழியர்களின் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி ஆகியவற்றை இல்லாதொழிக்கும் நிலைமையும் ஏற்படுத்தப்பட்டள்ளது - என்றார்.

## தேர்தல்களுக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டிய அவசியம் இல்லை. ஆளுங் கட்சியிலும் அமரலாம்.

எதிர்க்கட்சியிலும் அமரலாம். அதேநேரம், ஜனநாயக நடைமுறையான தேர்தலை நடத்தாமல் அரசாங்கம் சதி செய்து வருகிறது. எமக்கு எந்த நேரத்திலும் தேர்தலை எதிர்கொள்வதற்கு தயார் என்றார்.

## உலக நிதி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மறுசீரமைத்தல் மற்றும் நிலையான அபிவிருத்தி இலக்குகளுடன் இணைந்த கார்பன் அற்ற உலகப் பொருளாதாரத்திற்கான பாதையை உருவாக்குவதற்கான கூட்டான பார்வை ஒன்றை உருவாக்குவதாகும்.

18 ஆவது ஜி - 20 தலைவர்கள் உச்சி மாநாடு புது டில்லியில் நடைபெறவுள்ளதோடு ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான அபிவிருத்திஇலக்குகள் குறித்த மாநாடு நியூயோர்க் மற்றும் துபாயில் நடைபெறவுள்ள கோப்28 மாநாடு உள்ளிட்ட அடுத்த ஆண்டு சர்வதேச நாட்காட்டியில் உள்ள பிரதான கலந்துரையாடல்கள் மற்றும் உச்சிமாநாடுகளுடன் பிரிஜ்டவுண் முன்னெடுப்பு உள்ளிட்ட பல்வேற நிகழ்ச்சி நிரல்களை இணைக்கும் முயற்சிகளை பிரான்ஸ் மேற்கொண்டு வருகிறது.

அரசாங்கப் பிரதிநிதிகள், சர்வதேசநிறுவனங்கள், சிவில் சமூகம் மற்றும் தனியார் துறைச்செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பல்வேறுபங்குதாரர்களின் கூட்டணியை உருவாக்குவதன் மூலம் ஒரு கூட்டான பார்வைக்குள் நிலையான எதிர்காலத்திற்கான தேவையான மாற்றங்களைச்செயல்படுத்துவதை இந்த மாநாடு வலியுறுத்துகிறது.

எதிர்கால சந்ததியினருக்கானசிறந்தஎதிர்காலத்தை கட்டியெழுப்புவதற்கு ஒன்றிணைந்து செயற் பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி இந்த மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பங்கேற்பிற்கு பிரான்ஸ் ஜனாதிபதி, தனது பாராட்டுக்களை தெரிவித்துள்ளார்.

கடந்த கால சாதனைகளை முறியடித்து பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச் சூழல்முதலீட்டைமேம்படுத்துவதற்கான அபிலாஷையை அடைவதற்கு இந்த மாநாடு பெரும்உதவியாகஅமையும் என்பது குறிப்பிடத்தக்கது.

## நாட்டின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பிரச்சினை ஏற்படலாம்.

தொல்பொருள் சின்னங்கள் காணப்படும் இடங்களை நாம் நிச்சயமாகப் பாதுகாக்கவேண்டும். அதேநேரம், தற்போது வாழும் மக்களையும் அது பாதிக்காத வகையில் எமது நடவடிக்கைகள் இருக்கவேண்டும்.

சிங்கள - பௌத்த தொல்பொருள்களை மட்டும் இங்கு தொல்பொருள்களாகக் கருதிவிட முடியாது. அது இன, மதங்களுக்கு அப்பாற்பட்டது - என்றார். (05)

## காங்கேசன்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரவேற்பார்கள்.

காங்கேசன்துறைமுக திறப்பு விழாவின் பின்னர் யாழ்ப்பாணம் விமான நிலையந்தில் இடம்பெறும் நிகழ்வுகளிலும் அமைச்சர் குழுவினர் பங்குகொள்ளவுள்ளனர்.





விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்
076 443 80 22

# சட்டவிரோதச் செயல்களைக் கட்டுப்படுத்த ராணுவம் முழு ஒத்துழைப்புத் தரவேண்டும்

## யாழ். மாவட்ட கட்டளைத் தளபதியிடம் வலியுறுத்தினார் மாவட்டச் செயலர்





யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த இராணுவத்தினரின் ஒத்துழைப்பு அவசியம் என்று வலியுறுத்தியிருக்கிறார் யாழ். மாவட்டச் செயலாளர் அ.சிவபாலசுந்தரன.

குழு மோதல்கள், போதைப்பொருள் கடத்தல் மற்றும் விற்பனை கால்நடைகள் களவெடுத்து இறைச்சியாக்குதல்,மணல் கடத்தல் போன்றவற்றைத் தடுப்பதற்கு இராணுவத்தினரின் ஒத்துழைப்பு மிக அவசியம் என்று இராணுவத்தின் யாழ் மாவட்ட கட்டளைத் தளபதியிடம் தான் எடுத்துரைத்தான் என்று மாவட்டச்செயலர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

யாழ் மாவட்ட கட்டளைத் தளபதியாகப் பதவியேற்றுள்ள மேஜர் ஜெனரல் சுஜீவ கெட்டியாராச்சி இன்று யாழ்ப்பாண மாவட்டச் செயலரை மரியாதை நிமித்தம் சந்தித்து கலந்துரையாடினார். அப்போதே இந்தக் கருத்து வலியுறுத்தப்பட்டது. இராணுவ அதிகாரியுடனான தனது சந்திப்புக் குறித்து மாவட்டச் செயலர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கு பாதுகாப்புத் தரப்பின் ஒத்துழைப்பு மிக மிக அவசியம். மேலும் காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபன காணியிலிருந்து இராணுவத்தினர் வெளியேறிய நிலையில் சீமெந்து கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான பொருட்கள் களவாடப்படுவதாக பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. எனவே இராணுவத்தினர் அதனை தடுத்து நிறுத்துவதற்கு ஒத்துழைக்க வேண்டும்.

இராணுவத்தின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்ட காணிகள் பல அளவீடு செய்யப்படாது பொதுமக்களிடம் கையளிக்கப்படாமல் உள்ளது. குறித்த காணிகளை விரைவில் அளவீடு செய்ய உரிய திணைக்களத்தினர் நடவடிக்கை எடுத்துள்ள நிலையில் இராணுவத்தினர் அவர்களுக்கும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

குறிப்பாக மீளக்குடியமர்ந்த மக்களுக்கு 700றக்கும் மேற்பட்ட வீடுகள் இராணுவத்தினரின் பங்களிப்போடு கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. அதேபோல் எதிர்வரும் காலத்திலும் மீள்குடியேறிய மக்களுக்கான வீட்டு தேவைகள் மற்றும் ஏனைய தேவைகளை முழுமை செய்ய இராணுவத்தினர் முழு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் எனவும் கோரியிருக்கீன்றேன் - என்றார்.

# உள்ளூர் பஸ் சேவை தொடர்பில் வவுனியாவில் விசேட தீர்மானம்

வவுனியாவில் உள்ளூர் சேவைகளில் ஈடுபட்டுவரும் அரச தனியார் பஸ்கள் பழைய பஸ் நிலையம் வரை சென்று ஐந்து நிமிடங்கள் தரித்து நின்று சேவையில் ஈடுபடவேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட செயலாளர் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி கலந்துரையாடலில் பழைய பஸ் நிலையம் வரை உள்ளூர் பஸ் சேவைகளை நடத்துவதற்கான செயற்பாட்டை முன்னெடுக்குமாறு வர்த்தகர் சங்கத்தால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

குறிப்பாக அந்தப் பகுதியில் அதிகளவான வியாபார நிலையங்கள் இருப்பதால் பொதுமக்கள் அங்கு வந்துசெல்வதில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர். எனவே, மேற்படி விடயம் தொடர்பாகக் கரிசனை கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

மேற்படி விடயம் தொடர்பாக அரச, தனியார் பஸ் தரப்பினரிடமும் கருத்துக்கள் கோரப்பட்டன. இதன்போது பழைய பஸ் நிலையப்பகுதிக்குள் சேவையில் ஈடுபடுவதில் தமக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்று அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து குறித்த நடைமுறையை அமுல்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டதுடன், இது தொடர்பாக வட மாகாண ஆளுநர் மற்றும் பிரதமசெயலாளர் ஆகியோருக்கும் தெரியப்படுத்திமேலதிகநடவடிக்கையை முன்னெடுக்குமாறு தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி கலந்துரையாடலில் அரச அதிபர் பி.ஏ.சரத்சந்திர, அபிவிருத்திக் குழு தலைவர் கு.திலீபன், மாநகரசபை செயலாளர், உதவி பிரதேச செயலாளர், வர்த்தகர் சங்கம், ஓட்டோ உரிமையாளர் சங்கம், நடைபாதைவியாபாரிகள்சங்கம், உட்படப் பலர் கலந்துகொண்டனர். (05



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு விழாவை அடையாளப்படுத்துமுகமாக நூற்றாண்டு நினைவிடம் ஒன்று அமைக்கப்பட உள்ளது. இதற்கான அத்திவாரம் இடும் நிகழ்வு கலாசாலையின் அதிபர் ச.லலீசன் தலைமையில் நேற்றுக் காலை 9.30 மணிக்கு இடம்பெற்றது.

கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளரும் கோப்பாய் நவமங்கை நிவாச நிறுவுனருமாகிய சுவர்ணா நவரத்தினம் நினைவிடத்திற்கான அடிக்கல்லை நட்டு வைத்தார். அவரது உபயமாக இந்நினைவிடம் அமைய இருக்கிறது.

# பெண்களுக்கு எதிரான வன்முறையை கண்டித்து கிளிநொச்சியில் போராட்டம்





பெண்களுக்கு எதிரான வன்முறையைக் கண்டித்து கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அமைப்பின் ஏற்பாட்டில் நேற்றுகவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது கோணாவில் சந்திரமுகி சந்தியில் காலை 9.30 மணியளவில் ஆரம்பித்த இந்த கவனவீர்ப்புப் போராட்டம் கோணாவில் விளையாட்டு மைதானத்தில் நிறைவு பெற்றது. பெண்களுக்கு எதிரான வன்முறைக்கு எதிராக குறித்த போராடம் இடம்பெற்றது. குறித்த போராட்டத்தில் முன்னைனாள் பிரதேச சபை உறுப்பினர்கள், பெண்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலர் கலந்துகொண்டனர். 113

# பதிவு செய்யப்படாத மருந்தகங்களுக்கு எதிராக வவுனியாவில் சட்டநடவடிக்கை!

வவுனியாவில் பதிவுசெய்யப்படாத ஐந்து மருந்தகங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் வே.மகேந்திரன் தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட அபிவிருத்திகுழு கூட்டம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதன்போது கடந்த கூட்டத்தில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பாக மீளாய்வுசெய்யப்பட்டது.

அந்தவகையில் தனியார் மருந்தகங்களில் பதிவுசெய்யப்பட்ட மருந்தாளர்கள் இல்லாமல் மருந்துகள்வழங்கப்படுகின்ற விடயம் தொடர்பாகப் பரிசீலிக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் -

வவுனியாவில் 19 தனியார் மருந்தகங்கள் உள்ளன. அவற்றில் 8 மருந்தகங்கள் பதிவுசெய்யப்படவில்லை. அவற்றில் 5 மருந்தகங்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுத்துள்ளோம். ஏனைய மூன்று மருந்தகங்கள் பதிவுசெய்வதற்கான விண்ணப்பங்களை எமக்கு வழங்கியுள்ளனர்.

அத்துடன் இங்கு இரண்டு மொத்த வியாபார மருந்தகங்கள் உள்ள நிலையில், அதில் ஒன்று பதிவுசெய்யப்படவில்லை.

அதற்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. - என்றார்.

இதேவேளை வவுனியா பொது வைத்தியசாலையில் உள்ள மருந்தகங்கள் உரியநேரத்துக்கு முன்பாகவே மூடப்படுவதாக ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. இது தொடர்பாகஆராய்வதாகபிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார். (05)

# யாழில் ஓட்டோ குடை சாய்ந்ததால் முன்பள்ளி மாணவர்கள் படுகாயம்

யாழ்ப்பாணம், கொழும் புத்துறை - உதயபுரம் பகுதியில் ஓட்டோ குடை சாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

மேற்படிவிபத்தில்சிக்கிய முன்பள்ளி சிறுவர்கள் 11 பேர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஓட்டோ சாரதியும் விபத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது - நேற்று (புதன்கிழமை) காலை முன்பள்ளிச் சிறுவர்களை அதிகளவில் ஏற்றிக்கொண்டு பயணித்த ஓட்டோ குடை சாய்ந்துள்ளது. விபத்துச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# ஆட்சியின் எதிர்காலம் என்ன?

ரெலிக்கொம் உள்ளிட்ட இலாபம் தரும் அரச நிறுவனங்களை விற்பனை செய்வதற்கு ஆளும் தரப்பான பொது ஜன பெரமுன கட்சியினரே – குறிப்பாக அமைச்சர்களே – எதிர்ப்புத் தெரிவிக்கத் தொடங்கிவிட்டார்கள். அவர்களின் எதிர்ப்பு வெளிப்படையாவே முன்வைக்கப்படுகின்றது. ராஜபக்ச குடும்பத்தில் இருந்து நாமல் ராஜபக்ச இந்த எதிர்ப்பியக்கத்திற்குத் தலைமை தாங்குகிறார் போலுள்ளது.

இலாபகரமாக இயங்கும் அரச நிறுவனங்களைத் தனியார்மயப்படுத்தும் கொள்கை தமது கட்சியின் கொள்கைக்கு முரணானது என்ற தமது வழக்கமான பல்லவியை முன்வைத்து இந்த எதிர்ப்பை அவர்கள் பதிவு செய்கின்றார்கள். தமது கட்சி இடதுசாரியப் பின்னணியைக் கொண்டது என்றும் அது தனியார்மயப்படுத்தலை எதிர்க்கும் என்றும் சொல்லிக்கொண்டு, அதன் மூலம் ரெலிக்கொம்மைத் தனியார் மயப்படுத்துவதை எதிர்க்கிறார்கள்.

பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்தான் கடற்படையின் முன்னாள் அதிகாரி சரத் வீரசேகரவும். தேசிய பாதுகாப்புத் தொடர்பான நாடாளுமன்ற ஆலோசனைக் குழுவின் தலைவராக இருப்பவரும் அவர்தான். அந்தக் குழுதான் அண்மையில் ரெலிக்கொம்மைத் தனியார் மயப்படுத்துவது தேசிய பாதுகாப்பு நலன்களுக்குக் குந்தகமாக அமையும் என்று தெரிவித்திருந்தது. இதற்கு ரணில் தரப்பிலிருந்து தொடர்ந்தும் உறுதியான மறுப்புக்கள் வெளியிடப்பட்ட வண்ணம் இருக்கின்றது.

இருந்தாலும் பெரமுனவின் இராஜாங்க அமைச்சர்கள், நாடாளுமன் உறுப்பினர்கள் கடந்த சில நாட்களாகத் தொடர்ந்து எதிர்ப்புக்களை இது தொடர்பில் பதிவு செய்து வருகின்றனர். ரணில் விக்கிரமசிங்கவின் அரசு வர்த்தகத்தில் ஈடுபடவேண்டியதில்லை, அதனைத் தனியாரிடம் விட்டுவிடவேண்டும் என்கிற கொள்கைக்கும் பெரமுனவின் அடிப்படைக் கொள்கைக்கும் இடையே ஏற்பட்டுள்ள இந்தப் பெரும் முரண், இந்த ஆட்சியின் எதிர்காலத்தைக் கேள்விக்குறிக்குள்ளாக்கியுள்ளது.

இலாபகரமாக இயங்கும் நிறுவனங்களை விற்காமல் ரணில் விக்கிரமசிங்கவால் இப்போதைக்கு பெருமளவு டொலர்களைத் திரட்டமுடியாது. நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை விற்பதைவிட, இலாபகரமாக இயங்கும் நிறுவனங்களை விற்பதன் மூலமே பெருமளவில் நிதிப் பற்றாக்குறையை அவரால் ஈடுசெய்யமுடியும். துரிதமான பொருளாதார மீட்சிக்கான டொலரைச் சம்பாதிப்பதற்குள்ள இலகுவான வழி இதுதான். அப்படியிருக்கும்போது பெரமுனவினர் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கத் தொடங்கியிருப்பது ஆட்சியின் எதிர்காலத்தைக் கேள்விக்குள்ளாக்கி இருக்கின்றது.

ராஜபக்சக்கள் மீண்டும் வலுவான அரசியல் நுழைவுக்குத் தயாராகி விட்டார்கள் என்பதற்கான அறிகுறியாகவும் இதனை எடுத்துக்கொள்ளலாம். ரணிலைக் கட்டுப்படுத்துவதற்கான மூலக் கயிறாகவும் அவர்கள் இதனை எதிர்காலத்தில் பயன்படுத்துவார்கள். இன்னும் சொல்லப்போனால் ரணிலின் மூக்கணாங்கயிறு அவர்கள் கையில் இருக்கின்றது. எனவே ராஜபக்ஷக்களை ஓரங்கட்டி ரணிலால் செயற்படமுடியாத நிலையை ஏற்படுத்த இந்த விவகாரம் வாய்ப்பளித்துள்ளது.

எனவே பொருளாதார மீட்சிக்கான அரசின் நடவடிக்கைகள் மந்த நிலையை அடைவதற்கான வாய்ப்புக்கள் இப்போது அதிகமாகி வருகின்றன என்றே சொல்லவேண்டும். போராட்டக்காரர்களையும் ஒடுக்கிவிட்ட ரணில் விக்கிரமசிங்க, பெரமுனவினரைக் கட்டுப்படுத்தும் அங்குசத்தைக் கண்டுபிடிக்காத வரையில் இந்த ஆட்சியின் எதிர்காலம் நித்திய கண்டமாகத்தான் முடியப்போகின்றது.

# வடமாகாணத் தமிழரின் உலகளாவிய தாக்கம் சிங்கப்பூரின் ஜனாதிபதி வேட்பாளராக தர்மன்

(ஜீவன் தியாகராஜா)



பிரித்தானியக் காலனித்துவக் காலத்தில் சிங்கப்பூர் மலேசியாவுடன் இணைந்திருந்தது. சுதந்திரமடைந்த தன் பின்னர் 1966 ஒகஸ்ட் 9 ஆம் திகதி சிங்கப்பூர் மலேசியாவிலிருந்து பிரிந்து தனிக்குடியரசாகியது. அதற்கு முன்னதாக, முதலாவது உலகப்போர் உக்கிரமாக நடைபெற்றது.

அந்தப் போரின் பின்னரான காலத்தில் வடமாகாணத்தைச் சேர்ந்தவர் மலாயாவுக்குச் சென்றார். அவர் உட்பட அங்கு சென்ற நபர்கள் தமது முன்னேற்றத்துக்காகவும் நாட்டின் வளர்ச்சிக்காகவும் கடினமாக உழைத்தார்கள். தொழில் ரீதியாகவும், தனிப்பட்ட ரீதியாகவும், சமூக ரீதியாகவும் சிறப்பான செயற்பாடுகளை முன்னெடுத்தனர்.

தற்போது சிங்கப்பூர், பொருளாதார, சமூக, பல்லின கலாசார ரீதியாக முன்னேற்றகரமான நிலைமையில் உள்ளது. அந்த நாட்டின் பிரஜைகளும் உயர்ந்த வாழ்வாதார நிலையில் உள்ளார்கள் என்பதைக் கண்கூடாக அவதானிக்க முடிகின்றது.

தர்மன் சண்முகரத்தினத்தின் வரலாறும் மேற்படி நிலைமைகளை மையப்படுத்துவதாகவே உள்ளது. தமிழரான தர்மன் சண்முகரத்தினம் தற்போது சிங்கப்பூரின் ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்குகின்றமை உறுதியாகியுள்ளது. இதன்மூலமாக வடமாகாணத்தைப் பூர்வீகமாக கொண்டவர் பிறிதொரு நாட்டில் செலுத்தும் தாக்கம் வெளிப்பட்டுள்ளது.

தர்மன் சண்முகரத்தினத்தின் தாயாரின் பெற்றோர் (பாட்டனார்) ஊரெழு மற்றும் உரும்பிராயைச் சேர்ந்தவர்கள். அவருடைய தாத்தா வைத்தியர் விஸ்வலிங்கம். அவர் சிலோனியர்களுடன் சேர்ந்து செந்தூழ் சிவன் கோவிலை கட்டினார்.

அதேநேரம், அவர் ஒரு மருத்துவராகவும் அர்ப்பணிப்பான சேவையை முன்னெடுத்திருந்தார். இவரது தந்தை கே.சண்முகரத்தினம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். அவருடைய தாயார் மலாயாவில் பிறந்தவர்.

பின்னர், தர்மன் சண்முகரத்தினம் ஜப்பானிய-சீன வழக்கறிஞரான ஜேன் யுமிக்கோ இட்டோகி என்பவரைத் திருமணம் புரிந்தார். இவர்களுக்கு மூன்று ஆண்களும் ஒரு பெண்ணுமாக நான்கு பிள்ளைகள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கல்வியில் முதன்மை

தர்மன் சண்முகரத்தினம் இலண்டன் ஸ்கூல் ஒஃப் எக்கனொமிக்ஸில் பொருளாதாரத்தில் இளங்கலை அறிவியல் பட்டம் பெற்றவராவார். அவர் பட்டப்படிப்புக்கு முன்னதாக, ஆங்கிலோ-சீனப் பாடசாலையில் கல்வி கற்றார்.

பின்னர் 2011 இல் அவர் புலமைப்பரிசிலைப் பெற்று கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்துறையில் முதுகலைத் தத்துவப் பட்டம் பெற்றார், மேலும் ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தின் கெனடி அரசாங்கப் பாடசாலையில் பொதுநிர்வாகத்தில் முதுகலைப்பட்டமும் பெற்றார். அங்கு அவருக்கு சிறந்த செயல்திறன் மற்றும் தலைமைத்துவத் திறனுக்காக 'லூசியஸ் என் லிட்டாவர் ஃபெலோ' விருது வழங்கப்பட்டமை சிறப்பம்சமாகும்.

## அரசியலில் பிரவேசம்

துறைசார்ந்தவொரு பொருளாதார நிபுணரான தர்மன் சண்முகரத்தினம் சிங்கப்பூருக்கான அரச சேவையில், முக்கியமாக பொருளாதார மற்றும் சமூகக்கொள்கைகளுடன் தொடர்புடைய பணிகளில் பெரும் பங்காற்றினார்.

அதனையடுத்து, சிங்கப்பூர் அரசியலுக்குள் பிரவேசித்தார். அவர் முதன்முதலில் மக்கள் செயல் கட்சி ஊடாக அரசியலில் பிரவேசித்தவர். 2001 நவம்பரில் ஜுரோங் ஜிஆர்சி தொகுதியில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

மக்கள் செயல்கட்சி 79.75 சதவீத வாக்குகளைப் பெற்றதையடுத்து, ஆட்சி அமைத்தது. அதன்பின்னர் அவர் தொடர்ச்சியாக நான்கு முறை நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் அவர், சிங்கப்பூரின் துணைப் பிரதமர், நிதி அமைச்சர் மற்றும் கல்வி அமைச்சராக பல பரிணாமங்களை வகித்ததன் பின்னர் 2019 மே முதல் சிங்கப்பூர் அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சராகவும் சமூகக் கொள்கைகளுக்கான ஒருங்கிணைப்பு அமைச்சராகவும் உள்ளார்.

மேலும் பொருளாதாரக் கொள்கைகள் தொடர்பாகப் பிரதமருக்கு ஆலோசனை வழங்குபவராகவும், சிங்கப்பூர் நாணய நிதியத்தின் தலைவராகவும் மற்றும் சிங்கப்பூர் அரசாங்க முதலீட்டுக் கழகத்தின் துணைத் தலைவராகவும், அதன் முதலீட்டு உத்திகள் குழுவின் தலைவராகவும் வகிபாகத்தைக் கொண்டிருக்கின்றார்.

2014 முதல் பொருளாதார மேம்பாட்டு திணைக்களத்தின் சர்வதேச ஆலோசனைக்குழுவின் தலைவராகவும் இருந்து வரும் அவர், 2011-2019 காலப்பகுதியில் துணைப் பிரதமராகவும், 2011-2015 பொருளாதார மற்றும் சமூகக் கொள்கைகளுக்கான ஒருங்கிணைப்பு அமைச்சராகவும் செயற்பட்டுள்ள அவர் 2007-2015 வரையில் ஒன்பது ஆண்டுகள் நிதி அமைச்சராகவும், 2003-2008 ஐந்து ஆண்டுகள் கல்வி அமைச்சராகவும் இருந்தார்.

## பொதுச் சேவையில் பங்களிப்பு

தர்மன் சண்முகரத்தினம் கல்வி அமைச்சராகப் பணியாற்றிய போது, எதிர்கால சந்ததியினர் பரந்துபட்ட மற்றும் நெகிழ்வான தகுதியை அடைவதை நோக்கமாகக் கொண்ட முக்கியமான கல்விச் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தியமை விசேட அம்சமாகும்.

குறிப்பாக, 'பாலர் கல்வியின் விரிவாக்கம் மற்றும் மேம்படுத்தல் ஆகியவற்றைக் முன்னெடுத்தமையைக் குறிப்பிடலாம். வாழ்நாள் முழுவதும் கற்றல் மற்றும் திறன்களை மேம்படுத்த 2014 ஆம் ஆண்டில் புதிய திட்டத்தை ஆரம்பித்தார்.

கொரோனா தொற்றுப் பரவலின்போது, சிங்கப்பூர்களுக்கான பணிகளை ஆதரித்து மீண்டும் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகளை மேற்பார்வையிட்ட தேசிய செயற்பாடுகள் தொடர்பான சபைக்கும் தலைமைத்துவத்தை வழங்கியிருந்தார்.

முற்போக்கான ஊதியச் செயற்றிட்டத்தை அறிமுகப்படுத்தியதன் மூலம் குறைந்த ஊதியம் பெறுகின்ற தொழிலாளர்களின் வருமானத்தை உயர்த்துவதையும், சமூக சேவையாளர்களின் நிலைமைகளையும், சமூக சேவை அலுவலகங்களின் திறன்களை மேம்படுத்துவதையும் அவர் மேற்பார்வையிட்டிருந்தார்.

## ஏனைய வகிபாகங்கள்

தர்மன் சண்முகரத்தினம் சிங்கப்பூருக்கு வெளியே, சிங்கப்பூர், இந்திய மேம்பாட்டு சங்கத்தின் உறுப்பினர்கள் குழுவின் தலைவராகவும் உள்ளார், இது இந்திய சிங்கப்பூர் சமூகத்தில் கல்வி செயற்றிறன் மற்றும் சமூக பின்னடைவை மேம்படுத்த முயல்கிறது.

தர்மன் சண்முகரத்தினம் பல சர்வதேச சபைளுக்கும் தலைமை தாங்கினார், குறிப்பாக பொருளாதார மற்றும் நிதி சீர்திருத்தங்களில் கவனம் செலுத்திய அவர், 2017 முதல் 2022 வரை பொது மற்றும் தனியார் துறைகளைச் சேர்ந்த பொருளாதார மற்றும் நிதித் தலைவர்களின் சுதந்திரமான உலகளாவிய சபையின் ஜி-30 முப்பது குழுவின் தலைவராக இருந்துள்ளதோடு 2011 முதல் 2014 வரை சர்வதேச நாணய மற்றும் நிதிக் குழுவின் முதல் ஆசியத் தலைவராக இருப்பதும் பதவி வகித்திருந்தமையும் விசேடமானதாகும்.

இந்நிலையில் தர்மன் சண்முகரத்தினம் தற்போது சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக இயக்குநர் குழுவிலும், மற்றும் உலகப் பொருளாதார மன்றத்தின் அறங்காவலர் குழுவின் வெளிப்புற ஆலோசனைக் குழுவிலும் உள்ளார்.

இத்தகைய பதவி நிலைகளை வகித்து, உச்சத்துக்கே சென்றுவிட்ட அவருடைய வாழ்வியல் கதை இலங்கைக்கு வெளியே வடமாகாணத் தமிழர்களின் திறனைக் காண்பித்து நிற்கின்றது.

அத்துடன் அவருடைய வாழ்க்கைப் பயணமும் சாதனைகளும் தமிழர்களுக்கு ஒரு மிகச் சிறந்த பாடம். வடமாகாணத்தின் ஆளுநராக இருந்தவர் என்ற அடிப்படையிலும், நானும் கலாநிதி விஸ்வலிங்கமும் ஊரெழுவிலிருந்து மலாயாவிற்கும் மீண்டும் இலங்கைக்கும் ஆற்றிய பணியின் ஊடாக புதிய உறவுப் பாலத்தை அமைத்துக்கொண்டார் என்பது இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகின்றது.

(05)

**தற்போது சிங்கப்பூர், பொருளாதார, சமூக, பல்லின கலாச்சார ரீதியாக முன்னேற்றகரமான நிலைமையில் உள்ளது. அந்த நாட்டின் பிரஜைகளும் உயர்ந்த வாழ்வாதார நிலையில் உள்ளார்கள் என்பதைக் கண்கூடாக அவதானிக்க முடிகின்றது. தர்மன் சண்முகரத்தினத்தின் வரலாறும் மேற்படி நிலைமைகளை மையப்படுத்து-வதாகவே உள்ளது. தமிழரான தர்மன் சண்முகரத்தினம் தற்போது சிங்கப்பூரின் ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்குகின்றமை உறுதியாகியுள்ளது. இதன்மூலமாக வடமாகாணத்தைப் பூர்வீகமாகக் கொண்டவரின் பிறிதொரு நாட்டில் செலுத்தும் தாக்கம் வெளிப்பட்டுள்ளது.**



காலைக்கதிர் Kalaikkathir

# ரெலிகொம்மைத் தனியார் மயப்படுத்துவதால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாது

## பேராசிரியர் ரொஹான் சமரஜீவ உறுதியளிப்பு



ரெலிகொம் நிறுவனத்தை தனியார் மயப்படுத்துவதால் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படாதென தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழுவின் முன்னாள் தலைவர் பேராசிரியர் ரொஹான் சமரஜீவ தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்பு தொடர்பிலான துறைசார் மேற்பார்வைக் குழுவின் அறிக்கை, கற்பனைகளை மைய மாகக் காணப்படுவதாக சுட்டிக்காட்டிய பேராசிரியர் ரொஹான் சமரஜீவ, தேசிய பாதுகாப்பு என்ற சொல்லை அவர்கள் போராட்டத்துக்கான தொனிப்பொருளாக மாற்றிக்கொண்டுள்ளனர் என்றும் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவினால் தயாரிக்கப்படும் '101கதா' கலந்துரையாடல் நிகழ்வில் கலந்துகொண்டபோதே இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் பேராசிரியர் ரொஹான் சமரஜீவ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

துறைசார் நிபுணர்களிடத்தில் ஆலோசிக்காமல் இவ்வாறானதொரு அறிக்கையை தயாரித்துள்ளமை துறைசார் மேற்பார்வைக் குழுவின் நியதிகளுக்கு புறம்பானதெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த பேராசிரியர் ரொஹான் சமரஜீவ-

நிகழ்காலம் பற்றிய தெரிவு மற்றும் எதிர்காலம் பற்றிய நோக்கு என்பவை இல்லாமையே இவ்வாறான பிரச்சினைகளுக்கு முதன்மைக் காரணமாகும்.

1990 களில் பல்வேறு நிறுவனங்களுக்கும் இங்கு முதலிட அழைப்பு விடுக்கப்பட்டது. அன்று ரெலிகொம் நிறுவனத்திடம் தொலைத்தொடர்பு வலையமைப்பொன்று இருக்கவில்லை.

மொபிடெல் நிறுவனத்தில் பங்கு இருந்தாலும் முகாமைத்துவம் செய்யும் அதிகாரம் ஆஸ்திரேலிய நிறுவனம் ஒன்றிடமே காணப்பட்டது.

ரெலிகொம் நிறுவனத்துக்கு சொந்தமான நிறுவனம் என்பதால் அரசாங்கம் மொபிடெல் நிறுவனத்திடமிருந்து சேவையைப் பெற்றுகொண்டது. இருப்பினும் மொபிடெல் நிறுவனத்தின் முகாமைத்துவ உரிமத்தை டெல்ஸ்டா நிறுவனத்திடமே காணப்பட்டது.

ரெலிகொம் முகாமைத்துவ உரிமம் ஜப்பான் நிறுவனத்திடம் காணப்பட்டது. அதனால் ரெலிகொம் நிறுவனத்தின் தலைவராக இலங்கையர்கள் இருந்தபோதிலும் ஜப்பானிய பிரதம நிறைவேற்று அதிகாரிகளாலேயே முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

யுத்த காலத்திலும் 4 கையடக்க தொலைபேசி வலையமைப்பு நிறுவனங்களும் 3 நிலையான தொலைபேசி இணைப்பு நிறுவனங்களும் காணப்பட்டன. அவற்றில் டயலொக் நிறுனத்தில் மாத்திரமே இலங்கையர் ஒருவர் பிரதம நிறைவேற்று அதிகாரியாகக் காணப்பட்டார்.

இருப்பினும் அந்நிறுவனம் முழுமையாக மலேசியாவிற்கு சொந்தமாக இருந்தது. இவ்வாறிருக்க, சிலர் தேசிய பாதுகாப்பு என்ற விடயத்தை மந்திரம் போல சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

ரெலிகொம் நிறுவனத்தின் உரிமத்தை அரசாங்கம் முழுமையாகக் கொண்டிருந்த போது கொழும்பு லோட்டஸ் வீதியில் காணப்பட்ட தலைமையகத்திலிருந்தே அனைத்து சர்வதேச அழைப்புக்களும் பரிமாற்றப்பட்டன.

அந்த செயன்முறைக்குப் பாதிப்பு ஏற்பட்டிருந்தால் இலங்கை சர்வதேச நாடுகளிடத்திலிருந்து விலகியிருக்க வேண்டிய நிலை உருவாகியிருக்கும். வயர் மற்றும் மென்பொருள்கள் கட்டமைப்பில் பாதிப்பு ஏற்படும் பட்சத்தில் முழு வலையமைப்பும் முடங்கிவிடும். மென்பொருள் கட்டமைப்புக்கு மாற்று முறைமைகளும் காணப்படவில்லை.

ரெலிகொம் நிறுவனத்தை அரசாங்கம் நிர்வகித்த போதுகூட தேசிய பாதுகாப்பிற்கு இவ்வாறான சவால் காணப்பட்டது. அந்தக்காலத்தில் புலிகள் அமைப்பால் இரு தடவைகள் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது. தனியார் மயப்படுத்தப்பட்ட பின்னர் மாற்று முறைமைகளைப் பின்பற்றுமாறு ஜப்பான் நிறுவனத்திடம் நாம் அறிவுறுத்தியிருந்தோம்.

அவர்களும் உடனடியாக புதிய முத லீடுகளுடன் புதிய இடமொன்றில் மாற்று முறைமையொன்றை நிறுவினர். ரெலிகொம் நிறுவனம் முழுமையாக அரசாங்கத்தின் வசமாக காணப்பட்ட போதும் ஆட்சியாளர்கள் நிறுவனத்தின் பாதுகாப்பைப் பொருட்படுத்தவில்லை.

இருப்பினும் நாம் பாதுகாப்பற்ற இடம் எதுவென அறிந்துகொண்டதன் காரணமாகவே தகவல்களை சேமிக்கும் கட்டமைப்பொன்றை மாற்று இடத்தில் நிறுவினோம்.

அரச நிறுவனத்தால் செய்ய முடியாத ஒன்றை, ஜப்பானிய நிறுவனம் செய்தது. பெரும்பாலான அரச நிறுவனங்கள் உட்கட்டமைப்பு வசதிகளின் பாதுகாப்பைக் கவனிப்பதில்லை. அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களில் முதலீடு செய்யவும் முடியாது. பணமும் இல்லை. இவை சில மேற்பார்வைகளுடனேயே தனியார் மயப்படுத்தப்படுகின்றன.

மேலும் நாம் சொல்வதை அவர்கள் கேட்க வேண்டும். உதாரணமாக, அன்று ரெலிகொம் மற்றும் ஜப்பானிய நிறுவனம் செய்த தவறு காரணமாக, ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்கள் நட்டத்தை அனுபவிக்க வேண்டியேற்பட்டது. அது சட்டப்படி அபராதமாக இல்லாத போதிலும், அந்தத் தொகையை வாடிக்கையாளருக்குத் திருப்பிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

1990 ஆம் ஆண்டுகளில் எமது ஆட்சியின் போது, சர்வதேச அழைப்புகளில் ஏகபோக உரிமை இருந்தது. இன்று, சர்வதேச இணைப்புகள் ரெலிகொம் ஊடாக மேற்கொள்ளப்படுவதில்லை. ரெலிகொம் நிறுவனத்துக்கு ஒரே ஒரு கேபிள் நிலையமே உள்ளது.

இன்று, ஏனைய நிறுவனங்களிலிருந்தும் இணைய இணைப்புகளைப் பெற முடியும். அரசாங்கம் இன்று ரெலிகொம்மின் இணைய இணைப்பை மாத்திரமா பயன்படுத்துகிறது? அது தொடர்பில் அறிந்துகொள்ளாமல் தேசிய பாதுகாப்பு குறித்து மந்திரம் போல் கூறித்திரிகிறார்கள்.

இன்று பெரும்பாலான அரசாங்க தகவல்கள் ஜிமெயில் மூலம் பரிமாறப்படுகின்றன. ஜிமெயில் வெளிநாடுகளுக்குச் சொந்தமானது. அரசியல்வாதிகள் மற்றும் அரச நிறுவனங்களின் அதிகாரிகள் பெரும்பாலானோர் வட்ஸ்அப் மூலம் அழைப்புகளை மேற்கொள்கின்றனர். வட்ஸ்அப் யாருக்குச் சொந்தமானது? வட்ஸ்அப் மூலம் பரிமாறப்படும் தகவல்கள் வெளிநாடுகளில் சேமிக்கப்படுகின்றன.

எனவே, ரெலிகொம் நிறுவனமாக, இருந்தாலும் அல்லது தனியார் நிறுவனங்களாக இருந்தாலும் அவர்களிடமிருந்து இணைய இணைப்புகளை பெற்றுக்கொள்வதால் அந்த நிறுவனங்களுக்குத் தரவுகள் செல்லாது.

மேலும், இவை அனைத்தும் ஏனையவர்கள் அவற்றை அணுக முடியாதவாறு கடவுச்சொற்கள் மற்றும் பிற முறைகளால் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன, எனவே, ரெலிகொம் நிறுவனம் தனியார் மயமாக்கப்பட்டால், அரச தகவல்கள் வெளியே செல்லும் என்று கூறுவது ஒரு பெரிய மாயையாகும்.

இலங்கையில் இரண்டு தரவு மையங்கள் உள்ளன. ரெலிகொம் நிறுவனத்துக்கு ஒன்று. மற்றொன்று டயலொக் நிறுவனத்துக்கு உரியது. இவை அரசாங்கத்தின் தகவல்களைச் சேமிப்பதற்காக வாடகைக்கு எடுக்கப்பட்டுள்ளன. ஒரு வங்கியில் பாதுகாப்பான வைப்புப் பெட்டியின் ஒரு பகுதியை வாடகைக்கு எடுப்பது போல.

அந்த வைப்புப் பெட்டி யாருடைய கட்டுப்பாட்டில் இருக்கின்றது? குறித்த வங்கியிடமா? இல்லை.

அந்தப் பெட்டியை வாடகைக்கு எடுத்தவரிடமே அதன் திறப்பு உள்ளது. அவ்வாறே, அரசாங்கத் தரவுத்தளங்களை சம்பந்தப்பட்ட அதிகாரி மட்டுமே அணுக முடியும். இது சர்வதேச முறையாகும். கோப்பு என்பது ஒரு பழைய எண்ணமாகும். இப்போது தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளது. இலங்கைக்கு வெளியே ஒரு பிரதியை வைத்திருப்பதன் மூலம் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும். ஆனால் எம்மால் மட்டுமே அவற்றை அணுக முடியும். அரசியல்வாதிகளின் சகோதரர்கள் உறவினர்களும் அரச நிறுவனங்களில் நியமிக்கப்படுகிறார்கள். அதன் பிறகுதான் முறைகேடு நடக்கிறது. பொதுவாக, ஒரு துறைசார் மேற்பார்வைக் குழுவில் அறிவுஞானமுள்ளவர்கள் இருக்க வேண்டும். ஏனைய நாடுகளில் அவற்றை எவ்வாறு செய்கின்றார்கள் என்பதை நாம் கண்டறிய வேண்டும். இது வெறும் எண்ணங்களின் அடிப்படையில் மாத்திரமே தயாரிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் இவ்வாறானதொரு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை வருத்தமளிக்கிறது. நிபுணத்துவம் பெற்றவர்களிடம் இருந்து தகவல்களை எடுத்து அறிக்கையை தயாரித்திருக்கலாம். ஆனால் இந்தத் துறைசார் மேற்பார்வைக் குழுக்களின் கொள்கைகளுக்கு மாற்றமாகவே இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. - என்றார். (05)

# குடும்ப வன்முறைச் செயல் தடுப்புச்சட்டத்தில் திருத்தம்!

*2005 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க குடும்ப வன்முறை செயல் தடுப்புச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக சட்ட- மூலமொன்றைத்தயாரிப்பதற்காக 2018.03.06 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.*

*குறித்த அங்கீகாரத்தின் பிரகாரம் சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள குடும்ப வன்முறை செயல்தடுப்பு (திருத்தச்) சட்டமூலத்துக்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது.*

*அதற்கமைய, குறித்த சட்ட- மூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்கும் மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (05)*

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு எனப் பணமோசடி கேகாலையில் தம்பதிகள் கைதாகினார்கள்

வெளிநாடுகளில் வேலைவாய்ப்பை பெற்றுத் தருவதாகக் கூறி பண மோசடி செய்தார்கள் என்ற குற்றச்சாட்டில் தம்பதியரை செவ்வாய்க்கிழமை இரவு கேகாலையில் வைத்து பொலிஸார் கைது செய்-துள்ளனர். தம்பதியருக்கு எதிராக பல முறைப்பாடுகள் பதிவாகியிருந்தமை தொடர்பில் ரம்புக்கனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். வெளிநாடுகளில் வேலை வாய்ப்புகளைப் பெற்றுத் தருவதாகக் கூறி இவர்கள் 8 லட்சத்து 20 ஆயிரம் ரூபாவை பெற்று மோசடி செய்துள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. சந்தேகத்தில் கைதான தம்பதியர் ரம்புக்கனை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தத் தம்பதியினர் இதேபோன்று நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் பலரிடம் பண மோசடி செய்துள்ளமை மேலதிக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. மேலும், இந்த தம்பதியினரால் ஏமாற்றப்பட்டவர்கள் அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு தகவல் தெரிவிக்குமாறும் பொதுமக்களை பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர். (05)




# யுவதி பாலியல் துஷ்பிரயோகம்: பொலிஸ் சார்ஜன்ட் கைதானார்

20 வயதான யுவதியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என ரஸ்நாயக்கபுர பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சார்ஜன்ட் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவில் கடமையாற்றியவர் எனவும் அவர் 2021 ஆம் ஆண்டு முதல் நிகவெரட்டிய குற்றப் புலனாய்வுப் பிரிவில் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளார் எனவும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சந்தேகநபரான பொலிஸ் சார்ஜன்ட் இந்த யுவதியின் உறவினர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர். குறித்த யுவதி தனியாக இருந்தபோது வீட்டுக்குள் நுழைந்த இந்த பொலிஸ் சார்ஜன்ட் அவரைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளமை தெரிய வருகிறது.

யுவதி செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்ட ரஸ்நாயக்கபுர பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் பொலிஸ் சார்ஜன்ட் கைது செய்யப்பட்டுள்ளார். (05)

# சிகிச்சைக்குச் சென்ற பெண்ணை துஷ்பிரயோகம் செய்த வைத்தியர்

## கம்பஹா மாவட்டத்தில் சம்பவம்

கம்பஹா மாவட்டத்தின் சியம்பலாபே பிரதேசத்தில் உள்ள தனியார் வைத்திய நிலையம் ஒன்றுக்கு சிகிச்சை பெறச் சென்ற 42 வயதுடைய பெண்ணை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாகக் கூறப்படும் வைத்தியரை கைது செய்ய பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோக தடுப்பு பணியகம் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

இந்தப் பெண் செய்த முறைப்பாட்டின் பிரகாரம், குறித்த பெண்ணை வல்லுறவுக்கு உட்படுத்திய வைத்தியரைக் கைது செய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாகக் கூறப்படும் பெண் மருத்துவப் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டதாகவும் பொலிஸார் கூறினார். (05)

# பொதுத் தேர்தலில் நான் போட்டியிடுவேன் ஆளுநர் நியமனம் பெற்ற நவீன் தெரிவிப்பு

ஆளுநராக நியமிக்கப்பட்டாலும் அடுத்த நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் போட்டியிடுவேன். எந்த மாவட்டத்தில் போட்டியிடுவது என்பதை பின்னர் தீர்மானிப்போம் என சப்ரகமுவ மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

சப்ரகமுவ மாகாண ஆளுநராக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடமிருந்து நியமனம் பெற்றுக்கொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

பிரதான இரண்டு காரணங்களை அடிப்படையாக்கொண்டே சப்ரகமுவ மாகாண ஆளுநர் பதவியை ஏற்றுக் கொண்டேன். நான் 10 வருடங்கள் அமைச்சரவை அமைச்சராகச் செயற்பட்டிருக்கிறேன்.

அவ்வாறு இருக்கையில் மாகாணத்துக்கு செல்ல தீர்மானித்ததன் பிரதான காரணம்தான், மாகாணசபை செயற்படாத சந்தர்ப்பங்களில் மாகாணம் தொடர்பான அனைத்து அதிகாரங்களும் ஆளுநருக்கே கிடைக்கப்பெறுகின்றன. அதனால் அந்த அதிகாரங்களை பயன்படுத்திக்கொண்டு சப்ரகமுவ மாகாணத்துக்கு பாரிய சேவை ஒன்றை மேற்கொள்ள முயற்சிப்பேன்.

அடுத்த விடயம் என்னவென்றால், சவால்களுக்கு முகம்கொடுப்பது என்பது நாங்கள் ஜனாதிபதியிடமிருந்து கற்றுக்கொண்ட விடயமாகும். அதனால் தற்போது பொருளாதார நெருக்கடி உள்ள சந்தர்ப்பத்தில், அரச செலவுகள் குறைக்கப்படும் இந்த நேரத்தில், என்னுடைய திறமையால் குறிப்பாக தனியார் துறையிடமிருந்து பணம் பெற்றுக்கொண்டு சப்ரகமுவில் விசேடமாக கல்வித்துறைக்கு பாரிய சேவையை மேற்கொள்ள எதிர்பார்க்கிறேன். 18 மாதங்கள் என்ற காலத்துக்குள் என்னால் இதனை செய்ய முடியுமானால் அது தனிப்பட்ட ரீதியில் எனக்கு கிடைக்கும் பாரிய வெற்றியாகவே கருதுகிறேன்.

மேலும் நான் ஆளுநராகப் பதவி ஏற்றதை ஒரு விதியாகவே பார்க்கிறேன். ஏனெனில் என்னுடைய தந்தை காமினி திஸாநாயக்கவே இலங்கைக்கு மாகாணசபையை அறிமுகப்படுத்தியவர். அதனால் அவரின் மகனாக ஆளுநராக நியமிக்கப்பட்டு செல்கின்றமை உண்மையில் கடவுளின் செயலாகும். எனவே சப்ரகமுவ மாகாணத்துக்கு என்னால் முடிந்த சேவையை மேற்கொள்ள எதிர்பார்க்கிறேன்.

நான் மத்திய மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி அரசியல் செய்துவந்தவன்.

அதனால் அரசியல் செய்துவந்த மாகாணத்தில் ஆளுநராக நியமிக்கப்பட முடியாது என்றதொரு நியதியும் இருக்கிறது. அதனால்தான் மத்திய மாகாணத்துக்கு மிகவும் நெருக்கமாக இருக்கும் சப்ரகமுவ மாகாணத்துக்கு நியமிக்கப்பட்டிருக்கிறேன். என்றாலும் எனது இருதயம் மத்திய மாகாணமாகும்.

அத்துடன் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளபோதும் அடுத்த பொதுத் தேர்தலில் நான் போட்டியிடுவேன். ஆனால் எந்த மாவட்டத்தில் போட்டியிடுவது என்பதுதான் அடுதத பிரச்சினையாக இருக்கிறது. என்றாலும் எனது திறமைக்கு அமைய நுவரெலியா, கண்டி மாவட்டம் அல்லது சம்ரகமுவவில் மாவட்டம் ஒன்றாகவும் இருக்கும். அதனால் அது ஒரு பிரச்சினையாகாது என்று நினைக்கிறேன். அனைவருடனும் கலந்துரையாடி அதனை தீர்த்துக்கொள்ள முடியும். அது தொடர்பில் தற்போது அவசரப்படத் தேவையில்லை. - என்றார். (05)



# ஈஸ்டர் தாக்குதல் குற்றவாளிகள் தம்மைத்தாமே காட்டிக்கொடுப்பர்

## உண்மைகள் விரைவில் வரும் என்கிறார் பேராயர் கர்தினால்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான உண்மைகளை மறைத்து எம்மை ஏமாற்றி விட முடியும் என்று ஆட்சியாளர்கள் எண்ணுகின்றனர்.

ஆனால் மிகக் குறுகிய காலத்துக்குள் இந்தக் குற்றச் செயலுடன் தொடர்புடையவர்கள் ஒருவருக்கொருவர் தம்மைத் தாமே காட்டிக்கொடுத்து உண்மைகளை வெளிப்படுத்துவர் என பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்தின் திருவிழா செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதன்போது விசேட ஆராதனையின் போது உரை நிகழ்த்துகையிலேயே பேராயர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில் -

கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்னர் இந்தத் திருத்தலத்திலும் குண்டு வெடித்ததல்லவா? இதனால் சுமார் 60 பேர் கொல்லப்பட்டனர்.

இந்தக் கொலைகளுடன் தொடர்புடையவர்கள் யார்? இது தொடர்பில் ஏதேனும் நியாயமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டனவா? உண்மைகளை சரியாகக் கண்டு பிடிக்க நடவடிக்கை எடுக்கப் பட்டதா?



நீதியும் நியாயமும் எங்கே? எம்மை ஏமாற்ற முடியும் என்று எண்ணிக் கொண்டிருக்கின்றனர். அவ்வாறு எம்மை ஏமாற்ற முடியாது.

எம்மை ஏமாற்ற நினைப்பவர்களே ஏமாந்து போவர். இந்தத் திருத்தலத்தில் அப்பாவி பொது மக்களைக் கொன்றவர்கள் , அதற்கு ஒத்துழைத்தவர்கள் இன்று சமூகத்தில் சிறந்த இடங்களில் உள்ளனர்.

வெகுவிரைவில் அவர்கள் சமூகத்துக்கு வெளிப்படுத்தப்படுவார்கள். அவர்களுக்குள் தங்களைத் தாங்களே காட்டிக் கொடுத்து உண்மைகளை வெளிப் படுத்துவர்.

அந்த நாள் வரை நாம் காத்துக் கொண்டிருக்கின்றோம். சட்டம், நீதியைப் பற்றி அமைச்சர்கள் பேசிக் கொண்டிருக்கின்றனர். நாளொன்றுக்கு ஒரு சட்டத்தை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். அந்த சட்டங்கள் மூலம் மக்களின் குரல்களை முடக்கி அவர்களை சிறையிலடைத்து இவர்கள் மகிழ்ச்சியாக இருக்கவே எண்ணுகின்றனர்.

இடம்பெற்ற அனைத்துக் குற்றங்களையும் மூடி மறைத்துள்ளனர்.

அவ்வாறு குற்றங்களை முழுமையாக மறைத்து விட முடியாது.

இறைவனின் சக்தி அதனை விடப் பலம்மிக்கது. எனவே நீண்ட காலம் செல்லாமல் இந்த மனிதப்படுகொலைகளுடன் தொடர்புடையவர்களை இனங்காண அந்த இறைவன் எமக்கு உதவுவார் என்று நம்புகின்றோம். - என்றார். (05)

# மக்களின் ஜனநாயகத் தேர்தல் உரிமைகளை பாதுகாக்க அரசுக்கு முடியாமல் போயுள்ளது

## ரோஹன ஹெட்டியாராச்சி குற்றச்சாட்டு

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காகக் கோரப்பட்டிருந்த வேட்புமனுக்களை நீக்குவதற்கான பிரேரணை ஒன்றை சட்ட ரீதியில் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க அரசாங்கத்துக்கு முடியுமானாலும் தேர்தலுக்காக இதுவரை செலவிட்ட மக்களின் பணத்தை மீள பெற்றுக்கொடுக்கவோ மக்களுக்கு ஜனநாயகத்தைப் பாதுகாத்துக்கொடுக்கவோ அரசாங்கத்துக்கு முடியாமல் இருக்கிறது என பெப்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாரச்சி தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்ற வேட்புமனுக்களை நிராகரிப்பதற்கு அரசாங்கம் எடுத்திருக்கும் தீர்மானம் தொடர்பாகக் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் -

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காகக் கோரப்பட்டிருந்த வேட்புமனுக்களை நீக்குவதற்கான பிரேரணை ஒன்றை சட்ட ரீதியில் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க அரசாங்கத்துக்கு முடியும். என்றாலும் தேர்தலுக்காக இதுவரை செலவிட்ட ஐந்தாயிரம் லட்சம் ரூபா மக்களின் பணத்தை மீள பெற்றுக்கொடுக்கவோ மக்களுக்கு ஜனநாயகத்தைப் பாதுகாத்துக்கொடுக்கவோ ஆளும் அரசாங்கத்துக்கு முடியாமல் இருக்கிறது.




இருந்தபோதும் அரசாங்கத்தின் இந்தத் தீர்மானத்தை நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்த முடியும்.

அத்துடன் அரசமைப்புக்கு அமைய நடத்தப்பட வேண்டிய தேர்தல் ஒன்றை நடத்தாமல் இருப்பதற்கு தீர்மானிப்பது தேர்தல் திருத்தம் ஒன்றை மேற்கொள்வதற்காகவா என அரசாங்கத்திடம் கேட்கிறோம். அதேபோன்று முழுமையாக தேர்தல் திருத்தம் ஒன்றை மேற்கொள்வதற்கு அரசாங்கம் தயாராகுவதாக இருந்தால் எல்லை நிர்ணய நடவடிக்கையை ஏன் செய்ய வேண்டும் எனக் கேட்கிறோம்.

மேலும் அரசாங்கம் தற்போது ஜனாதிபதி தேர்தல் தொடர்பாகக் கதைத்து வருகிறது. அப்படியானால் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த இல்லாத பணம் ஜனாதிபதித் தேர்தலை நடத்த எவ்வாறு கிடைக்கிறது?. நாட்டு மக்களின் பணத்தைத் தங்களுக்கு நன்மையாகும் வகையில் தேர்தலுக்காக நினைத்த பிரகாரம் செலவிட முடியுமா? அதனால் அரசியல் அதிகாரம் மற்றும் தங்களின் நன்மைக்காக மாத்திரம் அரசாங்கம் செயற்பட்டு வருகின்றமை இன்று தெளிவாகத் தெரிகிறது.

எனவே தேர்தல் நடத்துவது நாடொன்றின் மக்களின் அடிப்படை உரிமையைப் பாதுகாத்துக் கொடுப்பதாகும். என்றாலும் அரசாங்கம் தற்போது அந்த உரிமை மற்றும் ஜனநாயகத்தை இல்லாமல் செய்யும் மக்கள் எதிர்ப்பு செயற்பாட்டில் ஈடுபட்டு வருகிறது. - என்றார். (05)

# முன்னணியின் மேலும் மூவர் விசாரணைக்காக அழைப்பு

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின்.யாழ் மாவட்ட அமைப்பாளர் தீபன் திலீசன், மகளீர் அணித் தலைவி வாசுகி சுதாகரன், மகளீர் அணி செயற்பாட்டாளர் கிருபா கிரிதரன் ஆகியோரை விசாரணைக்காக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு பொலிஸ் அழைப்பாணை விடுத்துள்ளது. (05)

# கலாச்சாரம், நல்லிணக்கத்தைப் பரப்பக்கூடிய உலக சினிமாக்களைத் திரையிட நடவடிக்கை

## நீதி அமைச்சு ஏற்பாடு

கலாச்சார நல்லிணக்கத்தை மக்கள் மயமாக்கும் உலகத் தரம் வாய்ந்த திரைப்படம் திரையிடுதல் மற்றும் அது தொடர்பான கலந்துரையாடலின் ஆரம்ப நிகழ்வு இன்று நீதி அமைச்சில் இடம்பெற இருக்கிறது.

மாதத்தில் ஒரு தினம் அனைத்து செயலகங்களிலும் திரையிடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என நீதி அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக நீதி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

இலங்கை வாழ் மக்கள் பல்லின, பல மத, கலாச்சார மற்றும் மொழிகளைக்கொண்டவர்ளாக இருக்கின்றனர்.


அனைத்து இனங்கள் மற்றும் கலாச்சாரங்களுக்கிடையில் சமாதானம் நல்லிணக்கம் மற்றும் சகோதரத்துவத்தை உறுதிப்படுத்துவதை அரசாங்கத்தின் முன்னணி நடவடிக்கையாக கருதி நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவின் சிந்தனைக்கமைய மாவட்டம், மாகாணம் மற்றும் பிரதேச மட்டத்தில் அனைத்து மாகாண செயலாளர் காரியாலயங்களிலும் ஒரே தினத்தில் ஒரே நேரத்தில் கலாசாரம் நல்லிணக்கத்தை மக்கள் மயமாக்கும் உலகத் தரம்வாய்ந்த சினிமா திரைப்படம் ஒன்றை திரையிட்டு, அது தொடர்பில் அறிவு பூர்வமான கருத்தாடல் வேலைத்திட்டம் மூலம் மக்களை அறிவுறுத்தும் தேசிய நல்லிணக்க வேலைத்திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

அதன் ஆரம்ப நிகழ்வு வியாழக்கிழமை 15 ஆம் திகதி காலை 9,30 மணிக்கு நீதி அமைச்சு அலுவலகக் கேட்போர் கூடத்தில் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற இருக்கிறது.

கறுப்பு, வெள்ளை இனப் பிரச்சினையை சமாதானப்படுத்திய தென் ஆபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டலாவின் சமூக சிந்தனைகளைக் கருத்திற்கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள இன்விக்டஸ் என்ற திரைப்படம் அன்றைய தினம் திரையிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆலோசனைக்கமைய சமாதானம் மற்றும் நல்லிணக்க வேலைத்திட்டத்தை இலங்கையில் மிகவும் பிரயோசனமான முறையில் மக்கள் மயமாக்கவும் அதற்காக இலங்கையில் அனைத்து இனங்களின் ஆதரவை பெற்றுக்கொள்வதை இலக்குவைத்து தென் ஆபிரிக்க சமாதானம் மற்றும் நல்லிணக்க வேலைத்திட்டம் மற்றும் அதன் மூலமான நன்மையை இலங்கையில் அனைத்து இனங்களுக்கிடையில் பகிர்ந்துகொள்வதை தொனிப்பொருளாக கொண்டுள்ள தேசிய ஒன்றிணைந்த மற்றும் நல்லிணக்க வேலைத்திட்டம் எனும் தொனிப்பொருளில், நாட்டில் அனைத்து மாவட்ட செயலாளர் காரியாலயங்கள் மற்றும் பிரதான செயலாளர் காரியாலயங்களில் மாதத்துக்கு ஒருமுறை உலக தரம்கொண்ட நல்லிணக்கத்தை தொனிப்பொருளாக்கொண்ட திரைப்படம் ஒன்றை திரையிட்டு அது தொடர்பில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் புத்திஜீவிகளின் பங்குபற்றலுடன் விசேட தெளிவுபடுத்தல் மேற்கொள்ளப்படும் என நீதி அமைச்சு தெரிவித்துள்ளது.

திரைப்படம் ஒவ்வொரு மாதத்திலும் 3ஆவது வாரத்தில் வியாழக்கிழமை தினங்களில் காலை 9,30 திரையிட ஆரம்பிப்பதுடன் அதற்கு நிகராக இடம்பெறும் புத்திஜீவிகளின் கலந்துரையாடல் (சூம்) நிகழ்நிலையினூடாக இடம்பெறும். (05)



# ஆசிரிய இடமாற்றத்தைக் கண்டித்து ஹற்றனில் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம்

## ஹைலண்ட்ஸ் கல்லூரி மாணவர், பெற்றோர் முன்னெடுப்பு










ஹற்றன் கல்வி வலயத்தில் இந்த வருடம் இடம்பெற்ற ஆசிரியர் இடமாற்றங்கள் முறையாக இடம்பெறவில்லை என்றும், உயர்தர கணித, விஞ்ஞானபிரிவுகளுக்கும் ஆங்கிலமொழிபிரிவுக்கும் தகுதியான ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை என்றும் கோரிக்கைகளை முன்வைத்து ஹற்றன் ஹைலண்ட்ஸ் கல்லூரி மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் நேற்று(புதன்கிழமை) காலை கல்லூரி முன்றிலில் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொண்டனர்.

இதில் கலந்துகொண்ட பெற்றோர்கள் கருத்துத் தெரிவிக்கையில் -

ஹற்றன் ஹைலண்ட்ஸ் கல்லூரி, நுவரெலியா மாவட்டத்தில் அதிக மாணவர்களை பல் கலைக்கழகத்துக்கு அனுப்பும் கல்லூரியாகும். ஆனால், இப்போது இந்தக் கல்லூரியின் வளர்ச்சியை பொறுத்துக்கொள்ள முடியாத சில கல்வி அதிகாரிகள் நல்லாசிரியர்களை வேறு பாடசாலைகளுக்கு மாற்றி விட்டுதகுதியில்லாத ஆசிரியர்களைநியமித்துள்ளனர்.

ஆங்கிலபிரிவுக்குநியமிக்கப்பட்டுள்ளஆசிரியர்கள் தமிழில் கற்பிக்கின்றனர். உயர்தர கணித விஞ்ஞான பிரிவுக்கு பொருத்தமான ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை.

கல்லூரியின் வளர்ச்சியைப் பிடிக்காத சில பெரும்பான்மை கல்வி அதிகாரிகளின் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப வலயக்கல்வி பணிப்பாளர் செயற்படுகின்றார். இதுதொடர்பாகஅவரிடம்கதைத்தும் சரியான பதில் தரவில்லை.

மேலும்,இந்தஅநியாயங்களைப்பார்த்துக்கொண்டு நுரெலியாமாவட்ட தமிழ்அமைச்சர்கள், எம்.பிக்களும் அமைதியாக இருப்பதைக் காணும் போது இதன் பின்னணயில் இவர்களும் செயற்படுகின்றார்களா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. ஏனென்றால் இது தொடர்பாகப் பேசுவதற்கு நாம் தமிழ் எம்.பி. ஒருவரை அழைத்தும் அவர் இறுதி வரை அந்த சந்திப்புக்கு வரவில்லை.

எனவே, இதற்குக் காரணமானவர்கள் பொறுப்புக் கூற வேண்டும். நாம் ஆசிரியர் இடமாற்றத்துக்கு எதிரானவர்கள் அல்லர். ஆனால் இப்படியான கல் லூரிக்குப் பொருத்தமான ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்றே கூறுகிறோம்.

நாம் எமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதற்கு யோசிக்கின்றோம். அடுத்த வருடம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஓய்வுபெற்று சென்று விடுவார். ஆனால், கல்லூரிக்கு ஏற்படும் பாதிப்புக்கு யார் பதில் கூறப்போகின்றார்கள்? எமது பிள்ளைகளின் எதிர்காலத்துக்கு யார் பொறுப்பேற்பது என்று தெரிவித்தனர். (05)

---

### கட்டணம் செலுத்தாத காரணத்தால்

# குடிதண்ணீர் விநியோகத்தை துண்டித்த ஊழியர் மீது தங்காலையில் தாக்குதல்

1தங்காலை தங்கெட்டிய வீர ம ாவத்தையில் உள்ள வீடொன்றுக்கான குழாய் குடிதண்ணீர் விநியோகத்தை துண்டித்த தங்காலை நீர் வழங்கல் சபையின்ஊழியர்ஒருவர்குறித்தவீட்டில் இருந்த ஒருவரால் தாக்கப்பட்டுள் ளார் என தங்காலை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தங்காலை நீர் வழங்கல் சபையின் ஊழியரான சிறிசாந்த என்பவரே தாக்குதலுக்குள்ளாகிதங்காலைபோதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

தங்காலை பிரதேசத்தில் நீர் கட்டணம் செலுத்தாதவர்களின் நீர் இணைப்பைத்துண்டிக்கதங்காலைநீர் வழங்கல் சபையின் உத்தியோகத்தர் உள்ளிட்ட ஊழியர்கள் சென்றபோதே இந்தச் சம்பவத்தை எதிர்கொண்ட தாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (05)

---

# கட்டணத்தைச் செலுத்தாத விகாரைகளின் இணைப்பை துண்டிக்கிறது மின்சாரசபை

### ஓமல்பே தேரர் குற்றச்சாட்டு

மின்கட்டணங்களை செலுத்தாத பௌத் தஆலயங்களுக்கான மின் இணைப்பை இலங்கை மின்சார சபை துண்டித்துள்ளது என ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

மின்கட்டணங்கள் அதிகரித்துள்ள நிலையில் அதற்கான நிவாரணங்கள் எவற்றையும் அரசாங்கம் வழங்கவில் லை எனத் தெரிவித்துள்ள அவர், சூரிய சக்தியில் இயங்கும் மின்கலங்களை அரசாங்கம் வழங்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் மின்கட்டணங்களை அதிகரித்துள்ளதால் மக்களின் வரும ானம்அதிகரித்துள்ளதா எனவும்கேள்வி எழுப்பியுள்ள அவர், கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் ஆலயங்களுக்கான மின்கட்டணங்கள் 555 வீதத்தால் அதி கரித்தவேளை அரசாங்கமும் ஜனாதி பதியும் ஆலயங்களுக்கு சூரியசக்தி யில் இயங்கும் மின்கலங்களை வழங்குவதாக தெரிவித்திருந்தனர். ஆனால் இதுவரை அவ்வாறான எவையும் வழங்கப்படவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் அம்பாந்தோட்டையில் உள்ள பௌத்த ஆலயம் உட்பட் சில ஆலயங்களுக்கான மின் இணைப்பை இலங்கைமின்சாரசபைதுண்டித்துள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையிலும் உது- வககந்தையிலும் உள்ள இரு பௌத்த ஆலயங்கள் 25 ஆயிரம் மற்றும் 95 ஆயிரம் ரூபா மின்கட்டணத்தை செலுத்தவேண்டியநிலைகாணப்பட்டது. அவர்கள் தங்களால் முடிந்தளவு கட்டணத்தை செலுத்தினார்கள.; கிராம மக்கள் வழங்கிய பணத்;திலிருந்தே கட்டணத்தை செலுத்தவேண்டும் என ஓமல்பே தெரிவித்துள்ளார்.

ஆனால், மக்களுக்கு தற்போது ஆலயங்களுக்கு அன்பளிப்பு செய் வதற்கு பணம் இல்லை. அரசாங்கம் அவர்களுக்குவருவாய்வரும்வழிகளை அழித்துவிட்டது எனவும் ஓமல்பே தேரர் தெரிவித்துள்ளார்.

கட்டணங்களை செலுத்தாததன் காரணமாக வறிய மக்களின் வீடுகளுக்கான மின்சாரத்தையும் இலங்கைமின்சாரசபைதுண்டித்துள்ளது. வழிபாட்டுத்தலங்கள் மாத்திரமல்ல, சாதாரண மக்களும் பாதிக்கப்பட் டு;ள்ளனர்.

இதன்காரணமாகவே அரசாங்கத்துக்கு எதிரான இந்த நடவடிக்கைக்கு எதிராக அனைவரும் ஒன்றிணையவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம். மக்களை



இந்த நியாயமற்ற செயலிற்கு எதிராக ஒன்றுதிரட்டவுள்ளோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள இலங்கை மி;ன்சாரசபையின் தலைவர் நலிந்த இலங்கோன், குறிப்பிட்ட காலத்தில் மின்கட்டணங்களை செலுத்தாத இடங்களுக்கான மின்விநியோகம் துண்டிக்கப்படும். ஆலயங்கள் வீடுகள் எந்த இடமாகவிருந்தாலும் அவர்கள் எங்கள் வாடிக்கையாளர்களே. எந்த வாடிக்கையாளருக்கும் நாங்கள் விசேட சலுகைகளை வழங்கமுடியாது. மின்கட்டணத்தை செலுத்தாவிட்டால் மின்சாரம் துண்டிக்கப்படு;ம் என அவர் தெரிவித்துள்ளார். (05)

---

# ரணில் ஒரு சிறந்த தலைவர் அல்லர்

கண்ணாடி முன் செல்லும் போது நாட்டுக்குதலைமைதாங்கக்கூடியஒருவர் தனக்குத் தெரிகிறார் என்று நாடாளும ன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். அதேநேரம் ரணில் ஒரு சிறந்த தலைவர் அல்லர் என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டுக்கு எவரால் சிறந்த தலைமை த்துவத்தை வழங்க முடியும் என்ற கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ஜனாதிபதி ரணில் விக்ரம சிங்க ஒருதிறமையானதலைவர்அல்லர் எனவும்நாடாளுமன்றஉறுப்பினர்சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். (05)

---

# தம்புத்தேகம வைத்தியசாலையின் வைத்தியர் ஒருவர் சடலமாக மீட்பு!




தம்புத்தேகம வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர் ஒருவரின் சடலம் அவரது உத்தியோகபூர்வ இல்லத்தி லிருந்து மீட்கப்பட்டுள்ளது.

குறித்த மருத்துவர் சில நாள்களுக்கு முன்னர் உயிரிழந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படும் வைத்தியர் சிலாபத்தைச் சேர்ந்த 35 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தம்புத்தேகம பொலிஸார்விசாரணைகளைமேற்கொண்டு வருகின்றனர். (05)

---

# பட்டதாரி ஆசிரியர்களாக மேலும் 5,500 பேருக்கு விரைவில் நியமனம்

பட்டதாரி ஆசிரியர்களாக மேலும் 5 ஆயிரத்து 500 பேர் விரைவில் சேவைக்கு இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

பௌதீகவளங்களுடன்மனிதவளத்தையும் பூர்த்திசெய்துபாடசாலைமுறைமைஅபிவிருத்தி செய்யப்பட வேண்டுமென அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

விஞ்ஞானம், கணிதம், தொழில்நுட்பம், மொழி, புவியியல், வர்த்தகம் ஆகிய பாடங்களுக்கு மூன்று மொழிகளிலும் 5 ஆயிரத்து 500 பட்டதாரி ஆசிரியர்களுக்கு விரைவில் நியமனம் வழங்கப்படும் என கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார். (05)

---

# பல்கலை ஆசிரியர் பற்றாக்குறையால் கற்பித்தல் நடவடிக்கையில் சிரமமாம்

*பல்கலைக்கழகங்களில் ஆசிரியர் பற்றாக்குறையால் கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக பல் கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. பல்கலைக்கழக அமைப்பில் கற்பித்தல் நடவடிக்கைகளுக்காக 11,293 ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர்.*

*ஆனால், தற்போது 6,677 பேர் மாத்திரமே அந்தப் பணியில் ஈடுபட்டுள்ளதாகக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சாருதத்ய இலங்க சிங்க தெரிவித்துள்ளார். (05)*

காலைக்கதிர் Kalaikkathir

# ஊவா மாகாண ஆளுநரை சந்தித்தார் கிழக்கு ஆளுநர்







(ஹஸ்பர்)

ஊவாமாகாண ஆளுநரை அவரது செயலகத்தில்,நேற்றுச் சந்தித்துப் பேசினார் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான்.

இந்தச் சந்திப்பில் கிழக்கு மாகாணத்திற்கும், ஊவாமாகாணத்திற்கும் இடையிலான சுற்றுலா, கைத்தொழில், கல்வி ஆகிய இருதரப்பு வேலைத்திட்டங்களைத்

தொடங்குவது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்திற்கு வருகை தருமாறு ஊவா மாகாண ஆளுநர் முஸாமில், பிரதம செயலாளர் மற்றும் அமைச்சின் செயலாளர்களுக்கு செந்தில் தொண்டமான் அழைப்பும் விடுத்தார்.

## உச்சி மாநாட்டில் உரையாற்ற ரணிலுக்கு பிரான்ஸ் அழைப்பு



பாரிஸில் நடைபெறவுள்ள உலகளாவிய தலைவர்கள் உச்சி மாநாட்டில் உரையாற்றுமாறு பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த உச்சி மாநாடு எதிர்வரும் 22 மற்றும் 23 ஆம் திகதிகளில் இடம்பெறும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

(05)

## இலங்கைக்கு இந்தியாவின் ஒத்துழைப்பு அவசியமாம்

### வலியுறுத்துகிறது அமெரிக்கா

இலங்கையில் தற்போதுள்ள நெருக்கடி நிலைக்கு இந்தியாவின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமானதென அமெரிக்காவின் திறைசேரியின் செயலாளர் ஜனெட் ஜெலென் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன்,இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து செயற்பட வேண்டியதும் அவசியம் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் இலங்கையின் நடவடிக்கைகளை அவதானித்து வருவதுடன், கடந்த ஆறு மாதங்களில் பல்வேறு விடயங்களில் முன்னேற்றகரமான செயற்பாடுகளை இலங்கை முன்னெடுத்துவருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் மூன்றாம் உலகநாடுகள்எதிர்கொள்ளும் கடன் அச்சுறுத்தல் பொருளாதாரத்துக்கும் ஸ்திரத்தன்மைக்கும் பாதிப்பை ஏற்படுத்தி வருவதுடன், இலங்கை போன்றநாடுகளுக்கு உரிய தருணத்தில் முழுமையான கடன் நிவாரணங்களை வழங்குவதற்கு மேலும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குத் திர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(05)

## வயோதிபர் ஒருவர் வெட்டிக் கொலை!

வயோதிபர் ஒருவர் கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் கம்பஹா,வெலிவேரிய பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த வயோதிபரின் சடலம் வீடொன் றினுள் இரத்த வெள்ளத்தில் இருந்து நேற்று மீட்கப்பட்டது.

68 வயதுடைய நபரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார். வெலிவேரிய பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணை கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நீதிவான் விசாரணைகளின் பின்னர் சடலம் பிரேத பரிசோதனைக்காகக் கம்பஹா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## இரண்டு தச்சுத் தொழிலாளர்கள் மின்சாரம் தாக்கி பரிதாபச் சாவு!

### மட்டக்களப்பில் சம்பவம்

மட்டக்களப்பில் மின்சாரம் தாக்கி இரண்டு தச்சுத் தொழிலாளர்கள் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

மட்டக்களப்புதலைமையகப் பொலிஸ் பிரிவிலுள்ள அமிர்தகழி பிரதேசத்தில் நேற்று முற்பகல் 11 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீடு ஒன்றின் மேல் மாடிக் கூரையைத் திருத்தும் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தச்சுத் தொழிலாள்கள் மீது மின்சாரம் தாக்கியதில் இருவர்சம்பவஇடத்திலேயே உயிரிழந்ததுடன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இருதயபுரத்தைச் சேர்ந்த 36 வயதுடைய ரொக்கி சைய்டே மற்றும் கருவப்பங்கேணியைச் சேர்ந்த 25 வயதுடைய ஞானப்பிரகாசம் கோடீசன் ஆகியோரே உயிரிழந்துள்ளனர் .

படுகாயமடைந்த 25 வயதுடைய இளைஞர் வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதுதொடர்பானமேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ராணுவ வைத்தியசாலை உலக சாதனை படைப்பு



இலங்கை இராணுவ வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்திய குழுவினர், மனித உடலில் இருந்து மிகப்பெரிய சிறுநீரகக் கல்லை வெற்றிகரமாக அகற்றி கின்னஸ் சாதனை படைத்துள்ளனர்.

இச் சத்திர சிகிச்சை கடந்த வியாழக்கிழமை கொழும்பு இராணுவ வைத்திய சாலையில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சத்திர சிகிச்சையில் வைத்தியர்களான கே. சுதர்ன், டபிள்யூ.பி.எஸ்.சி. பத்திரத்ன ,தமாா பிரேமதிலக, கேர்னல் யு.ஏ.எல்.டி. பெரேரா, கேணல் சி.எஸ். அபேசிங்க உள்ளிட்ட பலர் பங்கேற்றிருந்தனர்.

(05)

## சல்லியம் பதியில் வருடாந்த திருவிழா











(ஹஸ்பர்)

வரலாற்று சிறப்பு மிக்க திருகோணமலை சல்லியம்பதி சல்லி முத்துமாரியம்மன் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழாவின் 9 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை இரவு மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

அம்பாள் திருவீதி வலம் வருவதையும் விசேட பூஜை வழிபாடு இடம் பெற்றது.

பக்தர்கள் காவடி எடுப்பதையும், பாரம்பரிய மரபு முறைப்படி நிகழ்வுகள் இடம் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயத்தின் தரம் 2 மாணவர்களின் கல்விநடவடிக்கைகளுக்காக அலங்கரிக்கப்பட்ட வகுப்புகளைக் கையளிக்கும் நிகழ்வுதிங் கட்கிழமை பாடசாலையில் இடம் பெற்றது.

அதிபர் யூ.எல். நஸார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சாய்ந்தமருதுகோட்டக்கல்விப்பணிப்பாளர்என்.எம்.ஏ.மலிக் மற்றும் உதவிக் கல்விப்பணிப்பாளர் அஸ்மியா மலிக் ஆகியோர் அதிதிகளாகக் கலந்துகொண்டுவகுப்பறைகளைக் கையளித்தனர். வர்ணம்பூசிஅலங்கரிக்கப்பட்ட வகுப்புகளை அதிதிகள் திறந்து வைப்பதைப் படங்களில் காண்க.







சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயத்தின் தரம் 2 மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக அலங்கரிக்கப்பட்ட வகுப்புகளைக் கையளிக்கும் நிகழ்வு திங்கட்கிழமை பாடசாலையில் இடம் பெற்றது. அதிபர் யூ.எல். நஸார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சாய்ந்தமருது கோட்டக்கல்விப் பணிப்பாளர் என்.எம்.ஏ.மலிக் மற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர் அஸ்மியா மலிக் ஆகியோர் அதிதிகளாகக் கலந்துகொண்டு வகுப்பறைகளைக் கையளித்தனர். வர்ணம்பூசி அலங்கரிக்கப்பட்ட வகுப்புகளை அதிதிகள் திறந்து வைப்பதைப் படங்களில் காண்க.

# உரிய மரியாதை இல்லையேல் அரசிலிருந்துவெளியேறுவோம்

## இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த எச்சரிக்கை

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் மாவட்ட தலைவர்களுக்கு உரிய அங்கீகாரம் இல்லாவிட்டால் அரசில் இருந்து வெளியேறுவது பற்றி சிந்திக்க நேரிடும்.

இவ்வாறு மொட்டுக் கட்சியைச் சேர்ந்த இராஜாங்க அமைச்சர் சனத் நிஷனாந்த தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:

குடுகாரர்கள் மற்றும் தெருச் சண்டியர்களுக்கு அஞ்சி ஒளியும் நபர்கள் நாங்கள் கிடையாது.

எங்கள் வாக்குகளால் தான் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானார்.

அவர் ஜனாதிபதியான பின்னர் பாலித ரங்கே பண்டார உள்ளிட்ட ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் கொக்கரிக்க ஆரம்பித்துள்ளனர். அதிகமாகத்துள்ள வேண்டாம் என எச்சரிக்கின்றோம்.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவுக்காக உழைத்தவர்கள்தான் கட்சியின் மாவட்ட தலைவர்கள். அவர்களுக்கு உரிய இடமில்லையேல், அப்படியானதொரு அரசில் இருக்க வேண்டியதில்லை - என்றார்.

# ரணிலுக்கும் மொட்டுக்கும் இடையில் எந்தவித முரண்பாடுகளும் இல்லை!

## அமைச்சர் பிரசன்ன விளக்கம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் எவ்வித முரண்பாடுகளும் இல்லை என்று ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரும், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

ஜனாதிபதிக்கும் மொட்டுக் கட்சிக்கும் இடையில் முரண்பாடுகள் உள்ளன என்று பலர் சுட்டிக்காட்டுகின்றனர். உண்மையில் அப்படி எவ்வித முரண்பாடுகள் இல்லை.

ரணில் விக்கிரமசிங்கவின் அனுபவத்தையும் சவால்களை எதிர் கொள்ளும் திறனையும் உன்னிப்பாக ஆராய்ந்த பின்னரே அவரை ஜனாதிபதிப் பதவிக்கு நியமிக்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆதரவளித்தது.

நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் ஜனாதிபதி எடுத்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு தற்போது அமுல்படுத்தும் வேலைத்திட்டத்தின் பிரகாரம் இந்த நாட்டின் பொருளாதாரம் மீண்டெழும் என்று மக்கள் பலமாக நம்புகின்றார்கள் - என்றார்

# ஆட்சியைத் தீர்மானிப்பது கட்சிகள் அல்ல மக்களே

## மைத்திரி தெரிவிப்பு

நாட்டில் தேர்தல் ஒன்று மிகவும் அவசியம் என்று ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன ஊடகங்களிடம் தெரிவித்தார்.

ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியினராக மக்களே உள்ளனர் என்றும், ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தி கட்சியினருக்கு இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மக்கள் ஆணை இன்றி எவரும் ஆட்சியமைக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார். எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்வதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி தயார் என்றும் அதன் தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.



# நாட்டை அழித்த ராஜபக்சக்களைப் பாதுகாக்கும் தரப்புடன் ஐக்கிய மக்கள் சக்தி உறவு வைக்காது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் உறுதி

ஐக்கிய மக்கள் சக்தி ஒரு புதிய கட்சியாகும். இது இந்த நாட்டின் பலமான மக்கள் சார் கட்சியாகும். எனவே, இந்த நாட்டை அழித்த ராஜபக்சக்களைப் பாதுகாக்கும் எந்தத் தரப்புடனும் எந்த விதமான உறவையும் ஐக்கிய மக்கள் சக்தி ஏற்படுத்தாது.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அம்பாறையில் செவ்வாய்க் கிழமை நடைபெற்ற கட்சி செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பில் உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது வரிசைகள் இல்லை என்று பல நபர்கள் வீராப்பு பேசினாலும் 2019 இல் இருந்ததைப் போன்று எரிபொருள் உள்ளதா என நாம் வினவுகின்றோம். ஊட்டச்சத்தான உணவு இல்லாவிட்டாலும் தற்பெருமை பேசுவதை நிறுத்த முடியாது.

ஆட்சிக்கு வந்த இரண்டு மாதங்களிலேயே தனது நண்பர்களுக்கு பலகோடி வரிச்சலுகைகளை வழங்கிய தற்போதைய அரசு, வங்குரோத்தான நாடு இருந்ததை விட சிறப்பாக உள்ளது எனக் கூறுவது கேலிக்குரியது. வங்குரோத்து நிலைக்கும் பல்வேறு படி நிலையை அவர்களாகவே கொண்டுள்ளனர் - என்றார்.



# ராஜபக்சக்கள் நாட்டுக்கு இழைத்த அநீதிகளை மக்கள் மறக்கமாட்டார்

## எரான் விக்ரமரட்ண தெரிவிப்பு

இந்நாட்டு மக்கள் ஒருபோதும் ராஜபக்க்கள் நாட்டுக்கு இழைத்த அநீதிகளை மறந்து விடமாட்டார்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரட்ண குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

மீண்டும் ஆட்சிக்கு வருவோம் என்று மொட்டுக் கட்சியின் சிலர் கூறுகிறார்கள். இரண்டு வாரங்களுக்குள் தாங்கள் செய்த அநியாயங்களை மக்களிடமிருந்து மறக்கடித்துவிடலாம் என்று அவர்கள் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்.



ஆனால், இந்நாட்டு மக்கள் ஒருபோதும் அவர்கள் நாட்டுக்கு இழைத்த அநீதிகளை மறந்து விடமாட்டார்கள். ராஜபக்ஷர்கள் கொள்ளையடித்ததை நிரூபித்துக் காட்டுமாறு ஓர் அமைச்சர் கூறுகிறார்.

திருடியது ஒரு பக்கம் இருக்கட்டும். பிழையான தீர்மானங்களை எடுத்து நாட்டு மக்களை இந்த நிலைமைக்குள் தள்ளியது யார் என்று கேட்கவிரும்புகிறேன். இன்று 27 வீதமான பெற்றோர் தங்களின் உணவுத் தேவையைக் குறைத்து, தங்களின் பிள்ளைகளுக்கு உணவு வழங்கி வருவதாக ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது. இதற்கெல்லாம் யார் காரணம்? இப்படியான நபர்களுக்கு எதிராக சட்டம் நிலைநாட்டப்பட வேண்டும். - என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# கற்பிட்டிப் பொலிஸ் பொறுப்பதிகாரியின் இடமாற்றத்தினை எதிர்த்துப் போராட்டம்

கற்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை இடமாற்றம் செய்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அங்குள்ள மக்களில் ஒரு சாரார் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பொறுப்பதிகாரி எம்.ஐ.பி.எஸ் நிரந்த குமார வைத் தமது பகுதிக்கு, மீண்டும் நியமிக்குமாறும் அவர்கள் வலியுறுத்தினர்.

போதைப் பொருள் கடத்தல் காரர்களுக்கு எதிராகத் தீவிர நடவடிக்கை எடுத்ததன் காரணமாகவே பொலிஸ் அதிகாரி நிரந்த குமார இடமாற்றம் செய்யப்பட்டார் என்றும் போராட்டக்காரர்கள் குற்றஞ்சாட்டினர்.

புத்தளம் மாவட்டத்தில் உள்ளது கற்பிட்டி. அங்குள்ள விகாரையின் பீடாதிபதியான பெந்திவெக தியசேன இந்தப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்திருந்தார். சர்வமதத் தலைவர்களும் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

ஆர்ப்பபாட்டக்காரர்கள் பதாதைகளை ஏந்தியிருந்தனர். அமைதியான முறையில் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

நிரந்த கற்பீட்டிப் பொலிஸ் அதிகாரியாக இருந்தபோது போதைப் பொருள் கடத்தல், விற்பனைக்கு எதிராக எடுத்த கடும் நடவடிக்கைகள் காரணமாக அந்தப் பகுதியில் அதன் ஆதிக்கம் குறைந்திருந்தது என்றும் இதனால்தான் அவரை இடம்மாற்றிவிட்டார்கள் என்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தனர்.

இதனாலேயே அவர் மீண்டும் கற்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக நியமிக்க வேண்டுமென்றும் அவர்கள் வலியுறுத்தினர்.



# இளம் ஆசிரியை பட்டப்பகலில் வீதியில் குத்திப் படுகொலை!

## காதலன் வெறியாட்டம்

பாடசாலை ஆசிரியை ஒருவர் பட்டப்பகலில் வீதியில் வைத்துக் கத்தியால் குத்திப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொடூர சம்பவம் மாத்தறை, ஊருபொக்க - தொலமுல்ல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

குறித்த ஆசிரியை நேற்று பிற்பகல் பாடசாலை முடிந்து வீடு சென்று கொண்டிருந்த போதே கொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

உயிரிழந்த ஆசிரியை 26 வயதுடையவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவரது காதலன் இந்தக் கொலையைச் செய்திருக்கலாம் என்று சந்தேகிக்கும் பொலிஸார் குறித்த காதலனைத் தேடும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

# இ.கி.மிசனில் சர்வதேச யோகாதினம்

(வி.ரி. சகாதேவராஜா)

மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷன் சிறுவர் இல்லத்தில் சர்வதேச யோகா தினம், இல்ல பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்து கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் விவேகானந்த சபை ஏற்பாட்டில் சர்வதேச யோகா தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

200 மாணவர்கள் கலந்துகொண்ட நிகழ்வில் கிழக்கு பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் எம். செல்வராஜா உள்ளிட்ட அதிதிகள் கலந்து யோகாவின் மகத்துவம் தொடர்பாக உரையாற்றினார்கள்.

உதவி பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி சுரர்ச்சிதானந்தா ஜீ மகராஜ் விசேட உரையாற்றினார்



# பாக்கின்சன் நோயளர்களுக்கு இலவச மருந்துப் பொருட்கள்

## இன்று வழங்கப்படுகின்றது

பாக்கின்சன் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு இலவசமாக மருந்துப் பொருட்கள் யாழ். மூளாய் வைத்தியசாலையினால் வழங்கப்படவுள்ளது.

பாக்கின்சன் நோயினால் பாதிக்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் நோயாளர்களுக்கு யாழ்.போதனா வைத்தியசாலை நரம்பியல் வைத்திய நிபுணரின் ஆலோசனையுடன் இந்த இலவசமாக மருந்துப் பொருட்கள் வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்வு நாளை காலை 9 மணிக்கு மூளாய் வைத்தியசாலையின் கிளை நிறுவனமான இல.125, பிரதான வீதியில் உள்ள அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது. இந்த இலவச மருந்துப் பொருட்கள் வழங்கும் நிகழ்வு உலக பாக்கின்சன் செயற்றிட்டம் (கனடா) நிதி அனுசரணையில் இடம்பெறுகிறது.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.06.2023இல் வெளியிடப்பெற்றது.